ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44] இரக்தாக்ஷி ஆண்டு பங்குனித் திங்கள் 10-4-85 [இதழ்

இருநூறாவது ஆண்டு நினைவு விழாக் காலம்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

வல்லான் கமலையுள் ஞானப்ர
காசன் வசனமுணர்ந்
தெல்லாம் வெறும்மித்தை
[யென்றுகண்
டேன்இன்ப வாரியுள்ளே
செல்லாமற் சென்றதைத்
[தேக்காமல்
தேக்கித் தினந்தினமும்
நில்லாமல் நின்றுகொண்
[டேன் இது
வேமுத்தி நிச்சயமே.

— ஞானப்பிரகாசமாலை 7

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44 | 10-4-85 | இதழ் 5

உட்பொருள்

எண்		பக்கம்
1	மாதவச் சிவஞான முனிவர்	... 253
2	தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	... 257
3	குருமணி நின் திருத்தாள் போற்றி!	... 262
4	வழிகாட்டும் புத்தாண்டு!	... 264
5	திருமாணிகுழி தலச் சிறப்புக்கள்	... 265
6	அபிராமி அந்தாதி	... 269
7	திருவருட்பாத்திரட்டு	... 274
8	கதிரவன் குடும்பம்	.. 278
9	நால்வர்காலம்	.. 281
10	சமுதாயக் கட்டுக்கோப்பில் சரண்புகு!	... 285
11	அப்பூதியடிகள்	.. 286
12	சைவசித்தாந்தப் பயிற்சி வகுப்பு	... 292
13	ஆடாதோடை	— 294
14	செய்திகள்	... 297
15	விஞ்ஞானம் நிருபிக்கிறது!	... 301
16	எதிர் காலம்	... 304
17	இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி - பாடம்-3	... 309

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 12
ஆண்டுச் சந்தா சிலோன் 25
ஆண்டுச் சந்தா வெளிநாடு 35
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 125
ஆயுள் சந்தா வெளிநாடு 350

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்களிதழ்

மலர் 44 | இரக்தாக்ஷி – பங்குனி – 10–4–85 | இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

மாதவச் சிவஞான முனிவர்

இருநூற்றாண்டு நினைவுநாள் :

சைவசித்தாந்த முடிமணிநூல் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம். இவ்வரிய நூலுக்குச் சிற்றுரை ஒன்றும், பேருரை ஒன்றும் கண்ட பெருமைக்கு உரியவர் இன்றைக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த சிவஞான முனிவராவார். மாபாடியகர்த்தர் என்றும், மாதவச் சிவஞான யோகிகள் என்றும் சைவப்பெருமக்களால் போற்றப்பெறும் இவ்வருளாளர் சிவப்பேறுஎய்திய இரண்டு நூற்றாண்டு நிறைவு நாள் எதிர்வரும் குரோதன ஆண்டு, சித்திரைத்திங்கள் பதினாறும் நாள் ஆயில்ய விண்மீன் கூடிய ஞாயிற்றுக்கிழமைக்கு நேரான 28—4—1985 அன்று நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் பெறவுள்ளது.

துறைசை ஆதீனத் தூயதுறவி :

ஈடிலா இலக்கண நூற்புலமையும் எண்ணரிய இலக்கியத் திறமும், தருக்க நூல் தகவும், சைவ சித்தாந்தச் சாத்திரப்

பேரறிவும், இருமொழிப் புலமையும் நிரம்பப்பெற்ற மாதவச் சிவஞான முனிவரைப் பெற்று வழங்கிய பெரும் பேறு நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரத்திற்கு வாய்த்தது. பாரம்பரியம் மிக்க சைவவேளாளர்மரபில் தோன்றிய இவர்கள் இளமை யிலேயே திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத் தைச்சார்ந்து துறவு மேற்கொண்டவர்கள். இவர்கள் ஆனந்தக் கூத்தர், மயிலம்மையார் ஆகிய அருந்தவப் பெற்றோர்கட்கு பெருந்தவப் புதல்வராகத் தோன்றியவர்கள். திருவாவடுதுறை ஆதீனத்துப்பத்தாவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ முன்வேலப்ப தேசிக சுவாமிகள் அருள்பெற்ற துவிதீய பின்வேலப்பதேசிக சுவாமிகள்முக்களாலிங்கர் என்ற பிள்ளைத்திருநாமம் கொண் டிருந்த இவருக்குச் சமய-விசேட - நிர்வாண தீக்கைகள் செய் வித்து, 'சிவஞானத் தம்பிரான்' என்ற தீட்சா நாமத்தையும் வழங்கி அருளினார்கள்.

திராவிட மாபாடியகர்த்தர் :

வடமொழியில் பிரம்மசூத்திரம் போன்ற நூல்களுக்குப் பல்வேறுபேருரைகள் அமைந்துள்ளன. அத்தகு உரைவளங்கள் சைவசித்தாந்தசாத்திரங்களுக்கு அமையாது இருந்த குறையை நீக்கிச் சிவஞான போதத்திற்கு வேதாகம அடிப்படையில், தோத்திரநெறி தழுவி, தர்க்க வடமொழிப் புலமையோடு சிவஞான சுவாமிகள் வரைந்த பேருரை திராவிட மாபாடியம் என்ற சிறப்பினைப்பெற்றது. சிவஞான மாபாடியத்தின் சிறப்பினை, "கலைகள் எல்லாம் சிவஞான முனிவராகத் தோன்றின போலும் ; தருக்கமும், வியாகரணமும், இலக்கியமும், இலக்கணமும், தமிழ்ச்சிவஞானமுனிவர்க்குப்பணியாட்களாகித் துணைபுரியத் தவம் கிடந்தனவோ?" என அறிஞர் திரு. வி, கல்யாணசுந்தரனார் வியந்து போற்றுகின்றார்.

ஈடிலா இலக்கணப் புலமை :

சிவஞான சுவாமிகள் பெற்றிருந்த பல்துறைப் பேரறிவு வியப்பூட்டவல்லது. தலைசிறந்த உரையாசிரியராகமட்டுமின்றிச் சிறந்த தமிழ் இலக்கண வித்தகராவும் சுவாமிகள் திகழ்ந்தனர். தொல்காப்பியத்திற்கு எழுந்த பல்வேறு பேருரைகளுக்கும் மேலாய தம் சிந்தனைகளை ஒன்று திரட்டி இவர்கள் வழங்கிய தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, தமிழ் இலக்கண நுட்பக் கருவூலமாகத் திகழ்கின்றது. பனம்பாரனாரின் தொல்காப்பியப்

பாயிரத்தையும், "எழுத்தெனப்படுப" எனத் தொடங்கும் தொல்காப்பிய முதற் சூத்திரத்தையும் ஏதீடாகக் கொண்டு, வடமொழி இலக்கணப்புலமைநிறைவால் இவர்கள் கண்டுள்ள இலக்கண முடிபுகள் மெய்சிலிர்க்க வைப்பன. இதுவன்றி இலக்கண விளக்கம் நூலுக்கு மறுப்பாக இலக்கண விளக்கச் சூறாவளி என்ற நூலையும், சங்கர நமசிவாயர் இயற்றிய நன்னூல் விருத்தி உரைக்கு ஓர் திருத்தமும், இவர்களால் இயற்றப்பெற்றன.

இலக்கியப் படைப்புக்கள் :

சுவாமிகளின் இலக்கியப் படைப்புக்கள் தன்னிகரற்ற சிறப்புடையன. தலபுராணங்களுள் தலையாயதாக விளங்கும் காஞ்சிப்புராணம் இவர்களதுபக்திநிறைந்த படைப்பாற்றலுக்கு நிலையாய சான்றாக அமைகிறது. இதுவன்றி இவர்கள் இயற்றிய சிற்றிலக்கியங்கள் ஏறத்தாழப் பதினேழு உண்டு. சிறந்த அற இலக்கியமாகத் திகழ்வது இவர்கள் சோமேசர் முதுமொழி வெண்பா. திருக்குறளுக்கு அமைந்த சிறந்த விளக்க நூலாகத் திகழ்வது இது. இவர்களது அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ் மிகவும் பிரசித்தமானது. கம்பராமாயண முதற்செய்யுளுக்கு உரைநடையில் இவர்கள் எழுதிய சங்கோத்திர விருத்தி இவர்களது நுண்மாண் நுழைபுலனுக்கு அழியாச் சான்றுகூறிநிற்பது. திருவாவடுதுறை ஆதீனத்திலும் அடுத்தடுத்துக் காஞ்சிபுரம், குளத்தூர், தொட்டிக்கலை முதலிய ஊர்களிலும் வாழ்ந்திருந்த சிவஞான சுவாமிகள் அவ்வத் தலங்களிலும் பல அரிய இலக்கியங்களைப் படைத்து வழங்கித் தமிழுக்கு அணிசேர்த்தார்கள்.

பல்துறை வித்தகர்:

சிவஞான சுவாமிகள் தருக்கநூல் புலமைக்குத் தருக்க சங்கிரகமும் அன்னம்பட்டீயமும், என்ற மொழிபெயர்ப்பு நூல் சான்றாக விளங்குகின்றது. வடமொழியிலிருந்து சித்தாந்தப் பிரகாசிகை, சுலோகபஞ்சகம், சிவதத்துவ விவேகம் முதலிய நூல்களைச் சுவாமிகள் தமிழில் மொழி பெயர்த்து வழங்கினர். சைவ சித்தாந்தத் துறையில் சிவஞானசித்தியார் சுபக்கத்திற்கு இவர்கள் வரைந்த பொழிப்புரை சிறப்பாகப்போற்றப்படுகிறது. சிவ சமவாதத்திற்கு இவர்கள் எழுதிய மறுப்பும், சித்தாந்த மரபுக்கண்டனம் என்ற நூலுக்கு இவர்கள் எழுதிய சித்தாந்த மரபு கண்டன கண்டனமும் இவர்களது திட்பநுட்பப் பேரறிவை விளக்கவல்லன.

போற்றி வாழ்த்துவோம் :

பல்துறை ஆற்றல் பெற்றிலங்கிய மாதவச் சிவஞானசுவாமிகள் தமிழுக்கும் சைவசித்தாந்தச்செந்நெறிக்கும் ஆற்றிய அரும் பணிகள் தமிழ் மக்களால் நன்றியோடு நினைவுகூர்ந்து போற்றத் தக்கன. சுவாமிகளின் இருநூறுவது ஆண்டு நினைவு நாளைச் சைவத் தமிழுலகம் சிறப்பாக விழாவெடுத்து நாடெங்கும் கொண்டாடவிருப்பது மகிழ்ச்சிதருகின்றது. திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் திருவிடைமருதூரிலும், சைவநெறிக்கழகத்தினர் சார்பில் சுவாமிகள் அவதரித்த விக்கிரமசிங்கபுரத்திலும், அன்பர்கள் பலர் காஞ்சிபுரத்திலும் விழாக்காணவிருப்பதாகத் தெரிகிறது. தருமையாதீனம், அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், சிவஞான சுவாமிகளின் இருநூறுவது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், சென்னை முதலிய இடங்களில் சைவசித்தாந்தக் கருத்தரங்கம ஏப்ரல் – மேமாதங்களில் நடத்துவதாகத் திட்டமிட்டுள்ளது. ஒரு தமிழ்ச்சான்றோரை – சமய நூலாசிரியரை – தத்துவவிளக்கப்பேருரையாளரை – பல்துறைப் பேரறிஞரை எல்லாவற்றிற்கும்மேலாக மிகச்சிறந்த துறவரசரை நினைவுகூர்ந்து விழாக்காண்பதும், அவர்தம்நூல்களுக்குப் புதிய பதிப்புக்கள் கொணர்வதும், அவர்தம் கருத்துக்களை நாடறியச் செய்வதும் தமிழ் மக்களின், சைவ மக்களின் தலையாய கடனுகும். "ஞானசம்பந்தம்" இப்பேருரையாளரை பேரருளாளரை இவர் தம் இரண்டாவது – நூற்றுண்டு நிறைவுநாளில் நன்றியோடு நிறைநெஞ்சத்தோடு நினைவுகூர்ந்து போற்றி வாழ்த்தி மகிழ்கிறது.

சிவஞான முனிவர் திருப்பெயர் வாழ்க !
சித்தாந்த சைவச் செந்நெறி வளர்க !

சித்திரை வந்தனள்

கவிஞர் திரு. காராளன், கோவை.

சித்திரை வந்தனள் சித்திரை வந்தனள் சிரிக்கும் மலராக ;
சிந்தனை தந்தனள் வள்ளுவன் தந்தநல் குறளின் நினைவாக;
சத்தியம் கூட்டுவாள் நித்தியம் காட்டுவாள் உழைக்கும் கரமாக;
சாதனை ஆக்குவாள் வேதனை போக்குவாள் விரிந்த அறிவாக;
தத்துவம் தீட்டுவாள் தன்னலம் ஓட்டுவாள் சொக்கன் அருளாக
தருமையைக் காட்டுவாள் குருவருள் ஊட்டுவாள் அன்னை நினைவாக;
இத்திரு நாளினில் இனியநல் 'குரோதன' வாழ்த்தும் மலர்கோடி!
இன்பமே சூழ்க! நம் வையகம் வாழிய வான்என நீடூழி !

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருஅன்னியூர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவை ஒட்டி நடைபெற்ற யாகசாலை வழிபாட்டின்போது வழங்கியருளிய

ஆசியுரை

11—12—1984

" எம்பி ரானிமை யோர்கள் தமக்கெலாம்
இன்ப ராகி யிருந்தவெம் மீசனார்
துன்ப வல்வினை போகத் தொழுமவர்க்
கன்ப ராகிநின் றாரன்னி யூரரே. "

அன்னியூர், வன்னியூர் :

தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்கள் 275 எனப்போற்றப் பெறுகின்றன. அவற்றுள் காவிரியின் வடகரைத்தலங்கள் 63. தென்கரைத் தலங்கள் 127. வடகரையில் 22 ஆவது தலமாக விளங்குவதே திரு அன்னியூர் என்ற இத்தலமாகும். இது திரு மயிலாடுதுறைக்கருகில் உள்ளது. காவிரியின் தென்கரையில் திருவீழிமிழலைக்கு அருகில் திருவன்னியூர் என்னும் பெயரில் ஒருதலம் அமைந்துள்ளது. இவ்விரண்டும்வெவ்வேறு தலங்கள். திரு அன்னியூர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய இருவ ராலும் பாடல்பெற்ற தலம். திருவன்னியூர் நாவுக்கரசரால் மட்டும் பாடல்பெற்றதலம். வன்னியூர் அக்னி பூஜித்த தலமா கும் அங்குள்ள இறைவர் அக்னிபுரீசுவரர் என்னும் திருப்பெய ருடன் திகழ்வதே இதனைத்தெளிவாக்கும். அகநானூற்றிலும் நற்றிணையிலும் குறிக்கப்பெறும் அன்னி என்னும் சிற்றரசன் வாழ்ந்த ஊர் என்னும் காரணத்தால் இத்தலம் அன்னியூர்

என்று வழங்குகிறது எனக்கொள்ளலாம். அன்னி என்னும் சிற்றரசன் அழுந்தூர்த்திதியனேடு போரிட்ட இடம் குறுக்கைப் பறந்தலை என அகநானூறு கூறுகிறது. இதற்கு,

" ....அலரே
அன்னி குறுக்கைப் பறந்தலை, திதியன்
தொல்நிலை முழுமுதல் துமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை, வயிரியர்
இன் இசை ஆர்ப்பினும் பெரிதே "

என்னும் அகநானூறு 45 – ம் பாடல் வரிகளும்,

" அன்னி குறுக்கைப் பறந்தலை, திதியன்
தொல்நிலை முழுமுதல் துமியப் பண்ணிய
நன்னர் மெல்இணர்ப் புன்னை போல,
கடுநவைப் படீஇயர் மாதோ ... "

என்னும் அகநானூறு 145 ம் பாடல் வரிகளும் சான்றுகளாக அமைகின்றன. இப்பாடல் வரிகளாலும், காமதகனம் செய்த குறுக்கைக்கு அருகில் இத்தலம் அமைந்திருப்பதாலும் இங்குள்ள இறைவன்பெயர் ஆபத்சகாயர் என்று உள்ளதாலும் அன்னி என்ற குறுநில மன்னன் திதியனுடன் போர்புரிந்த காலத்து இறைவன் ஆபத்சகாயராக உதவியிருக்கக்கூடுமாதலாலும் அன்னி என்ற சிற்றரசன் வாழ்ந்த ஊராகவே இதனைக் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது.

பொன்னூரில் பொன்விழா :

அந்த வன்னியூர் இப்பொழுது அன்னூர் என்று வழங்குகிறது. அன்னியூர் என்னும் இத்தலம் இப்பொழுது பொன்னூர் என்று வழங்கப் படுகிறது. காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள் அவர்கள் பொன்விழாவை முன்னிட்டுத் தம் முகத்திலுள்ள ஐம்பது பாடல்பெற்ற திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்குப் பெருவிழா நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளார்கள். அத்திட்டத்தில் 51 – ஆவது திருக்கோயிலாகப் பின்னே சேர்க்கப் பெற்றது இத்திருக்கோயில். ஆனல் அத்திட்டத்தின் முதல் திருக்கோயிலாகத் திருப்பணி செய்யப்பெற்று நாளைய தினம் குடமுழுக்குவிழா நிகழ இருக்கிறது. இது எண்ணிச் செய்ததில்லை. பொன்விழா நினைவாக நிகழும் திருப்பணிக் குடமுழுக்கு விழா பொன்னூரில் முதல்முதல் தொடங்க வேண்டும் என்பது திருவருள் அமைப்பு.

இது இறைவன் திருவருளால்நிகழ்வது. நமக்குத்தெரியாமலேயே எல்லாச் செயல்களையும் நம்மைக்கருவியாகக் கொண்டு செய்து முடித்து விடுகின்றான் இறைவன். ஆழ்ந்து சிந்தித்தால் இதன் அருமை விளங்கும். இதனை நமது ஆதிபரமாசாரிய சுவாமிகள் ஸ்ரீ குருஞானசம்பந்தர்,

" ஏதேது செய்தாலும் ஏதேது சொன்னாலும்
ஏதேது சிந்தித் திருந்தாலும் — மாதேவா
நின்செயலே என்று நீனைதருளா லேஉணரின்
என்செயலே காண்கிலேனே "

என்ற சிவபோகசாரப் பாடலால் தெளிவாக்குகின்றார்.

அரன்மனையும் அரண்மனையும் :

திருக்கோயில்களின் செயல் முறைகள் பலவும் நாட்டு மக்களை நெறிப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன. கோயில் என்றால் தலைவன் வசிக்கும் இடம் என்று பொருள்படும். (கோ என்றால் தலைவன்; இல் என்றால் வசிக்குமிடம்) அனைத்து ஜீவராசிகளுக்கும் தலைவனாக இருந்து அருள் வழங்கும் இறைவன் இருக்கும் இடம் கோயில் என்று வழங்குகிறது. உபசாரவழக்கில் இறையருளைத் தாங்கிச் செயல்படும் முறையில் அரசனையும் கோ என்று வழங்கிவருகின்றோம். அவனுடைய அரண்மனையும் ' அரசுறை கோயில் ... ' என்று வழங்கப்படுகிறது. இறைவனின் இருப்பிடமாகிய அரன்மனையும் இறைவனின் பிரதிநிதியாகத் திகழும் அரசனின் இருப்பிடமாகிய அரண்மனையும் ' கோயில் ' என்னும் சொல்லால் வழங்கி வருகின்றன.

கோயில் வழியே குடிகள் :

திருக்கோயில்களில் விழாக்கள் தொடங்குகின்ற போது கொடியேற்றப் பெறுகிறது. அக்கொடி இடபக்கொடி, அது அறத்தின் வடிவம். ஒருபாற்கோடாமல் செலுத்தப்படுவதே அறம். அதனை இறைவன் உயிர்களிடத்துச் செலுத்துகின்றார் என்பதை இது காட்டுகிறது. அவன் ஊர்தியாகக் கொண்டு இருப்பதும் அந்த இடபமே. தாமும் நடந்து பிறருக்கும் சொல்வது தான் முறை என்பதை இறைவன் அறத்தையே ஊர்தியாகக் கொண்டு நடத்திக்காட்டுகின்றார். அறமே மேற்கொள்ளத்தக்கது; அறமே வெல்லும் என்பதைக் கொடியின் மூலம் பிறருக்கு அறிவுறுத்தவே கொடியில் இடபம் அமைந்துள்ளது. அதே கருத்தில் தான் அரசியல் வாதிகளும் தங்கள்

கட்சியின் கருத்து விளக்கங்களைக் கொடியில் அமைத்து அதனை விழாக்காலங்களில் ஏற்றுகின்றனர். திருக்கோயில்களில் 10 நாட்களில் விழா நிறைவுற்றவுடன் கொடி இறக்கப்பெறும். அதே போலத்தான் சமூக அரசியல் வாதிகளும் விழா முடிந்தவுடன் கொடியை இறக்கிவிடுகிறார்கள்.

அருள்வழியே அரசு :

இறைவனுடைய அருள்வழித்தத்துவக் கோட்பாடுகளைத் தம்முடைய வாழ்க்கைக் குறிக்கோளாகக்கொண்டு அவற்றைத் தம்முடைய வாழ்க்கையில் வாழ்ந்து காட்டி அதனால் ஏற்படுகின்ற இடையூறுகளை எல்லாம் ஏற்றுத் தம வாழ்வையே இந் நெறிக்காகத் தியாகம்செய்த பெரியோர்கள் தாம் சைவத்தில் நாயன்மார்கள்; வைணவத்தில் ஆழ்வார்கள். அத்தகைய தியாகப் பெருமக்களாகிய 63 நாயன்மார்களையும் 12 ஆழ்வார்களையும் சிலைவடிவில் உருவமைத்து நாளும் போற்றிப் பூசனை நிகழ்த்தப் படுகிறது ஆலயங்களில். இதே நிலையில் தான் அரசின்கொள்கைக் காகப் பாடுபட்டுப் பணிசெய்து இடையூறுகளை எல்லாம் முறியடித்துத் தம் வாழ்வில் தியாகம்செய்த தியாகிகளுக்குச் சிலைவைத்துப் போற்றுகிறார்கள். கொடியேற்றுதலும் சிலை அமைத்துப் போற்றுதலும் ஆகிய இவ்விரு நிகழ்ச்சிகளும் திருக் கோயில்களைப் பார்த்துத்தான் அரசு செய்கிறது என்று சொல்ல முடியாது. ஆனாலும் அதன்வழியேதான் அரசுநடை போட்டுக் கொண்டிருக்கிறது என்பது மட்டும் மறுக்க இயலாத உண்மை. நன்கு சிந்தித்துப் பார்ப்பவர்கட்கு இவை போல இன்னும் பல நிகழ்ச்சிகளைத் திருவருள் முன்னோடியாக நின்று இயக்கிக் கொண்டிருக்கிறது என்பது புலனாகும்.

இருபெருமக்களின் அறவுரை :

எலுமிச்சைமரம் இத்தலத்தின் தலவிருட்சமாக விளங்கு கிறது. பழங்காலத்தில் இது எலுமிச்சை மரங்கள் நிறைந்த காடாக இருந்திருக்கிறது. விஜுசாரண்யம் என்று இதனை வட மொழியில் கூறுகின்றனர். எலுமிச்சம் பழம் மங்கலப் பொருளாகப் போற்றப் பெறுகின்றது. சி. வைட்டமின் நிறைந் தது உலகியல் தலைவர்களைக் காணும்பொழுது எலுமிச்சம்பழம் கொடுத்துப் பார்ப்பதுவழக்கம். இறைவனைத் தரிசிக்கிறபோதும் இறையருள் பெற்ற அடியார்களையும் ஆசாரிய மூர்த்திகளைக் காண்கிற போதும் பூர்ணபலமாகிய தேங்காய்வைத்துப் பார்க்க வேண்டும் என்பது மரபு.

இத்தலத்து இறைவனைத் திருஞானசம்பந்தர் சோதியாக வழிபட்டுள்ளார். சோதிஎன்பது ஒளி, ஞானம்என்ற பொருளில் வழங்கப்பெறுகின்றது. அந்தச்சோதியைவழிபட்டால்நீதியோடு வாழலாம்; இறைவனோடு உறவுகொண்டால் எதிலும் நிறைவு பெறலாம்; இறைவனே! எந்தையே! என்று போற்றினால் பந்தம்நீங்கலாம்; தொண்டுசெய்பவர்க்கு வினைவிண்டுபோகும்; பத்தராகி முத்தராவர் என்று திருஞானசம்பந்தர் இத்தலப்பதிகத்தில் அறவுரைபகர்கின்றார். இமயவர்கட்கெல்லாம் இனியவராக இருப்பவர் இறைவர்; தொழுபவர்களுடைய துன்பங்களை எல்லாம் போக்குபவர்; தொழுமவர்கட்கு அன்பர்; நாளும் பணிவாரின் வினையைத் துடைப்பவர்; உயிர்களிடத்து இரக்கம் கொண்ட அந்தணர். ஆலநீழற் கீழிருந்து அன்பர்கட்கு அறம் உரைப்பவர்; அன்பர்க்கு எளியராகவும் வன்பர்க்கு அரியராகவும் நிற்பவர் அன்னியூரர் என்று திருநாவுக்கரசர் இவ்வூர்ப் பதிகத்தில் அறவுரை பகர்கின்றார்.

வாழ்த்து :

இத்தகைய அருமையும் பெருமையும் வாய்ந்த இத்திருக்கோயில் திருப்பணி செய்யப்பெறுமல்பழுதாயிருந்தது. இதனைத் திருப்பணி செய்துகுடமுழுக்காட்டி அருட்பொலிவோடு திகழச் செய்ய வேண்டும் என்று காஞ்சி காமகோடிபீடம் ஜயேந்திர சரஸ்வதிசுவாமிகள்தமதுபொன்விழா நினைவாகத்திருவுளம்பற்றினார்கள். அவர்களுடைய எண்ணத்தின் அடிப்படையில் பொன் விழாக்குழுவினர்திருப்பணியைச்செம்மையாகச்செய்துள்ளனர். இத்திருப்பணியில் உள்ளூரில் உள்ளவர்கள் ஓரளவு பங்கு கொண்டிருப்பினும் இவ்வூரில் நிலம் பெற்றுள்ள திரு. K. S. இராமசாமிசெட்டியார், இவ்வூரில் தோன்றி திருச்சிராப்பள்ளியிலுள்ள டால்மியா சிமெண்ட் ஏஜண்டாகஉள்ள திரு. சிவராமன், திருச்சி அகிலா டிரேடிங் கம்பெனி உரிமையாளர் திரு. R. வெங்கட்ரமணி, பாம்பேயில் உள்ள திரு. V. இராஜாமணி ஆகியோர் பெரும்பங்கு கொண்டிருப்பது பாராட்டிற்குரியது. இவர்களை ஒருங்கிணைத்துச் செயற்படுத்திச் சிறப்பித்தவர் மயிலாடுதுறை நமது ஆதீன வழக்குரைஞர் அன்பர் திரு. C. R. குஞ்சிதபாதம் ஐயர் அவர்கள் ஆவர். இந்நற்பணிக்குப்பல்லாற்றானும் உதவிபுரிந்து பணியாற்றிய அனைவரும் எல்லா நலன்களும் பெற்று நீடுவாழ எல்லாம்வல்ல ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க சீரடியாரெல்லாம்.

வளர்க சீர்ப்பணிகளெல்லாம்.

குருமணிநின் திருத்தாள் போற்றி!*

'செந்தில் குமரன்'

உண்முகமாய் எக்காலும் உத்தமனைப்
பரசிவத்தை உணர்ந் துவப்பாய்!
பண்முகத்தால் திருமுறையின் பாநலத்தைப்
பாடியே பரவி நிற்பாய்!
எண்முகத்தால் தெய்வநலச் சிந்தனையில்
என்றுமே இருப்பாய்! ஞான
சண்முகத்தான் திருப்பெயராய்! சால்புநிறை
குருமணிநின் திருத்தாள் போற்றி! (1)

காவியிலே தூய்மைநெறி காட்டி நிற்கும்
கற்பகமே! கனிந்தே எம்தம்
ஆவியிலே குடிபுகுந்த அருட் குருவே!
அற்புதமே! தருமை ஆட்சி
மேவியினி தேஓச்சும் மேன்மைமிகு
தவமணியே! புலமை மிக்கோய்!
நாவினிலே நலம் மிகவே வாழ்த்துகிறோம்
நற்குருவே நாளும் போற்றி (2)

சொல்லினிலே அழகுண்டு வளமுண்டு
நலமுண்டு சோர்விலாத
வல்லியல்புத் தகையுண்டு வகையுண்டு
தொகையுண்டு வாய்மையுண்டு
நல்லியல்பு மிகவுண்டு ஞானமுண்டு
எனவியந்து நல்லோர் போற்றும்
பல்லியல்புச் சீர்கொண்ட தருமபுர
நாயகனார் பைந்தாள் போற்றி! (3)

---

* ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் குரோதன ஆண்டு நாண்மங்கல விழாவை (28—4—1985) முன்னிட்டு வெளியிடப் பெறும் போற்றிப்பாமாலை.

தேசைஎலாம் திருமுகத்தில் பொலிவாகத்
    தேக்கிவைத்த திருவே! நின்றன்
ஆசையெலாம் சிவபூசை ஆற்றுவதில்
    மிகஉவந்து அமைத்துக் கொண்டாய்!
'பூசை எலாம்' எனப்பூண்டாய்! பூசையினைப்
    புரிவதிலே புகழ்மை யுற்றாய்!
ஈசனருள் வடிவான குருமணியே!
    மணமலராம் இணைத்தாள் போற்றி! (4)

புவிமீது சைவநெறிப் புனிதத்தை
    நாட்டஒரு புலமே கண்டாய்!
செவிமீது நாமீது செயல் இழந்த
    சிறார்கட்கோர் இல்லம் செய்தாய்!
நவில்மேன்மைக் கல்வியும் நோய் தீர்மருந்தும்
    எளியோர்க்கு நல்கச் செய்தாய்!
கவிமேவும் புகழ்மிக்க குருமணியே!
    பொன்னாரும் கழல்கள் போற்றி! (5)

தருமைநகர்த் தனிவிளக்கே! மெய்ஞ்ஞானக்
    கனியருளும் தருவே! போற்றி!
பெருமைக்கோர் குருமணியே திருவருளின்
    பெட்டகமாம் பெரியோய்! போற்றி!
அருமையினும் அருமையாய் அறம்வளர்க்கும்
    சீர்சான்ற அண்ணல் போற்றி!
இருமைக்கும் வழிகாட்டும் ஈடற்ற
    இருஞ்சுடரே! போற்றி போற்றி! (6)

குருமணியின் அருள்மொழி

அற நிறுவனம்

மக்களை நன்னெறியில் ஒழுகச்செய்வதும் இன்றியமையாத சமுதாயப் பணியாகும். இதற்கு உயிர்நாடியாக இருப்பதே சமயம். இச்சமயத் தத்துவங்களைப் போதிப்பதன் வாயிலாக மக்களை ஒழுக்க நெறியில் கட்டுப்பாட்டுடன் வாழச்செய்வதே அறநிறுவனத்தின் தலையாய கடமை.

வழிகாட்டும் புத்தாண்டு !

திரு. அரங்க. முத்துமணி
மாவட்டப் பதிவாளர் (தணிக்கை), சிதம்பரம் 608 001.

(வெண்பா)

அனைத்துலக சைவநற் சித்தாந்த ஆய்வு
தனைக்கண்ட நந்தம் தருமை – முனிவராம்
இன்னருட் கொண்டல் இனிய குருமணிகள்
தன்னடிபால் வைத்தேன் தலை.

(அறுசீர் விருத்தம்)

கடந்ததோர் யாண்டில் மக்கள் கண்டிட்ட துன்பம் யாவும்
முடங்கிட வேண்டும்; வாழ்வு முழுமதி பூத்த தென்னத்
தொடங்கிட வேண்டும்; இன்று தொடங்கிடும் புதிய ஆண்டில்
இடங்கொளவேண்டும்இன்பம் இமிழ்கடல்வரைப்பிலெல்லாம்

குரோதன யாண்டு தானும் கொடுக்கட்டும் நன்மையாவும்!
துரோகமும் பகையும் வீழ்க, தோன்றிடும் ஒளிவெள்ளத்தில்
விரோதிகள் ஆழ்க; நாடு விடிவெள்ளி கண்டு வாழ்க!
புராதனப் பெருமை யெல்லாம் போற்றுவம் பொன்னைப்போல

மனமெனும் தோட்டந் தன்னில் மலர்ச்செடி அன்பை நட்டுச்
சினமெனும் களையை நீக்கி, சிவமெனும் நீரைப் பாய்ச்சி
அனலினை யேந்தும் கூத்தன் அடியிணை தொழுது வந்தால்
வினையெலாம் நம்மை விட்டு, விரைவிலே நீங்கு மன்றே!

தெய்வநற் கொள்கை யோங்க, திருமுறை வையந் தன்னில்
மெய்யான வாழ்வை நல்க, மேதினி போற்றும் நல்ல
பொய்கையாம் தருமை தன்னில் பூத்திடும் அருளைப் போல
வையந்தான் சிறக்க, நல்ல வழிகாட்டும் புத்தாண் டன்றே!

திருமாணிகுழி தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்

வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

இது தென்னார்க்காடு மாவட்டம் கடலூர் தாலுக்காவில் உள்ளது. இத்தலம் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத்திருப் திருப்பதிகம் ஒன்றைப் பெற்றுள்ள பெருமை உடையது. நடு நாட்டுத் தேவாரத்தலங்களில் 17 ஆவது திருத்தலமாக விளங்கு வது.

வழி:

கடலூர் புதுநகர் (திருபாதிரிப்புலியூர்) பேருந்து நிலயத்தி லிருந்து, திருவந்திபுரம் வழியாகப் பாலூர் பண்ருட்டி முதலிய ஊர்களுக்குச் செல்லும், பேருந்துகளில் 9 கி.மி. தூரம்சென்ருல் இத்தலத்தை அடையலாம். திருவந்திபுரத்தை அடுத்துச் சுந்தரர் பாடி என்னும் இடத்திற்கு அருகில் கெடிலநதிப் பாலத்தைக் கடந்து தெற்கே சிறிதுதூரம் சென்ருல் திருமாணிகுழித் திருக் கோயிலைத் தரிசிக்கலாம். தலமும் கோயிலும் கெடிலநதியின் தென்கரையில் உள்ளன.

தலப்பெயர்:

இத்தலம் உதவி திருமாணிகுழி எனத் தேவாரத்திருப்பாடல் கள் தோறும்குறிக்கப்பெற்றுள்ளது. ஊர்ப்பெயர்உதவிஎன்றும் கோயிற்பெயர் திருமாணிகுழி எனவும் வழங்கப்பெற்றுக் காலப் போக்கில் கோயிற்பெயரே ஊர்பெயராகமாறி இருக்கலாம்.

வடநாட்டுக்கோணதேசத்து உருத்திராக்கவணிகர், அத்திரி என்பவர் இப்பகுதிக்கு வந்த போது திருடர்கள் அவரை வழி மறித்துப் பொருள்களைக் கொள்ளையடிக்க முற்பட்டனர். திருமாணிகுழி இறைவர் அத்திரிக்கு உதவிபுரியும் திருவுள்ளத் தோடு சென்று திருடர்களிடமிருந்து அவரைக்காத்து உதவி புரிந்தமையால் இத்தலம் உதவி எனவும் இறைவர்உதவிநாயகர் எனவும் அம்பிகை உதவிநாயகி எனவும் வழங்கப்பெற்றனர் எனத் தலபுராணம் கூறுகிறது.

கல்வெட்டுக்களில் இத்தலம் உதவி எனக் குறிக்கப் பெற்றுள்ளதைக் காணலாம். இக்கோயிலிலுள்ள விநாயகர், நடராஜர், சிவகாமி, சந்திரசேகரர், பிரதோஷநாயகர், அம்பாள், மாணிக்கவாசகர், முருகன், வள்ளி, தெய்வயானை ஆகிய உற்சவத் திருமேனிகளில் உதவி என்ற பெயர் பொறிக்கப் பெற்றுள்ளது.

திருமால் வாமன பிரமசாரியாக அவதாரம் எடுத்து மாவலி மன்னன்பால் மூன்றடிமண் கேட்டுப்பின் அவனை அழித்த கொலைப்பழியைப் போக்கிக் கொள்ள வழிபட்ட தலம் ஆதலால் மாணிகுழி எனப்பட்டது. இத்தலத் தேவாரத் திருப்பதிகப் பாடல்: "நித்தநியமத் தொழிலனாகிய நெடுமால் குறளனாகி மிகவும் சித்தமதொருக்கி வழிபாடு செய்கின்ற சிவயோகிகள் இடமாம்" எனத் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டருள்கின்றார். பெரியபுராணத்தில் சேக்கிழார் "போர்வலித்தோள் மாவலிதன் மங்கல வேள்வியில் மண்டு வாமனராய் மண்ணிரந்த செங் கணவன் வழிபட்ட திருமாணிகுழி" எனத் தலபுராண வரலாற்றைக் குறிப்பிட்டருள்கின்றார். கோயில் ஆழமான பகுதியில் அமைந்துள்ளதால் குழி எனப் பெற்றது. அப்பர் தேவாரத்தில் குடி என வரும் தலங்களைத் தொகுத்துப் பாடியுள்ளதிருத் தாண்டகப் பாடலில் திருமாணிகுடி என ஒரு தலம் குறிக்கப்படுகின்றது. அப்பெயர் இத்தலத்தைக் குறிப்பதாயின் இவ்வூர்ப் பெயர் திருமாணிகுடி எனவும் கூறப்பெற்றது எனக்கருதலாம். இத்தலத்திற்குவாமனபுரி, இந்திரலோகம், பீமசங்கமக்ஷேத்திரம் முதலிய பெயர்களும் வழங்கப்பெற்றன.

தலப்பெருமை :

திருமால் வாமன அவதாரம் எடுத்து அசுரர்குல மாவலி மன்னனை அழித்துத் தன்னைப்பற்றிய கொலைப்பழிதீர வழிபட்ட தலம் திருமாணிகுழி. இப்புராண வரலாற்றுச்செய்தி இத்தலத் தேவாரத்திலும், பெரியபுராணத்துள்ளும் இடம்பெற்றிருத்தலைக் காணலாம். இத்தலத்தில் இறைவன் இறைவியுடன் இருப்பதாக மரபு ஆதலின் எப்போதும் சுவாமி சந்நிதி திரையிடப்பட்டே இருக்கும். பதினோரு உருத்திரர்களில் பீமருத்திரர் உருவம் திரையில் சரிகைவேலைப்பாடுகளோடு எழுதப்பட்டுள்ளது. இவருக்கே முதலில் அருச்சனை, தீபாராதனை, பூசை முதலியன நடைபெறும். அதன்பிறகே சுவாமிக்கு வழிபாடுகள் மட்டுமே நிகழும். அப்போது மட்டுமே சிவலிங்கத் திருவுருவைத் தரிசிக்கலாம். ஏனைய தலங்களிலிருந்து வேறுபட்டுள்ள வழிபாட்டு முறையை இங்குக்காணலாம். திருவண்ணமலையில் கார்த்திகைத் திங்களில் வரும் பரணியில் மலைத்தீப வழிபாடு நிகழ்வது போல

இங்கும் கார்த்திகைத் திங்களில் ரோகிணியில் தீபதரிசனம் நிகழ்கிறது. சுவாமி அம்பாள் எப்போதுமே ஐக்யநிலையில் இருப்பது இத்தல ஐதிகமாதலின் அர்த்தயாமத்தில் பள்ளியறை வழிபாடு தனியே இத்தலத்தில் இல்லைஎன்பது குறிப்பிடத்தக்கது.

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளிப்பாடிய திருப்பதிகம் இத்தலத்தின் பெருமையை நமக்கு நன்குணர்த்தும் இந்திரனது அமராவதி போன்று திருமாணிகுழி விளங்குகிறது என்றும் சிவபிரான் விரும்பி உறையும் திருத்தலம் இது என்றும் திருஞானசம்பந்தர் இத்தலத்தில் அருளிச் செய்துள்ளார். திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகப்பாடல் ஒன்றும் இத் தலத்திற்குள்ளது. இத்தலத்திற்குச் சுந்தரர் எழுந்தருளி வழிபட்டார் எனச் சேக்கிழார் பெரியபுராணத்துள் குறித்துள் ளார். சுந்தரர் பாடிய தேவாரம் கிடைக்கவில்லை. சுந்தரர் பாடிய தேவாரம் இத்தலத்திற்கு இருந்திருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாகச் சுந்தரர்பாடி என்ற ஸ்தலம் கெடில நதியின் வடபால் உள்ளதைக் காணலாம். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் இத்தலத்திற்குள்ளது. சேக்கிழார் பெரியபுராணத்தில் வாமனர் வழிபட்ட இத்தலத்துப் புராணவரலாற்றைக் குறித்துப் பாடி உள்ளார்.

கோயிலமைப்பு :

'தென் திசையில் கங்கையெனும் திருக்கெடிலம்' எனச் சேக்கிழாரால் புகழ்ந்து போற்றப்படும் கெடில நதியின் தென் கரையில் கேப்பர்மலைத் தொடரின் அடிவாரத்தில் உள்ளது. திருமாணிகுழி. கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. திருவீதிகளைச் சேர்த்து மூன்று பிராகாரங்கள் உள்ளன. ஐந்து நிலைகளுடன் கூடிய இராஜகோபுரம் கோயிலின் வாயிலில் உள்ளது. கோபுரம் விரைவில் திருப்பணி செய்யப்பெற வேண்டிய நிலையில் மிகவும் பழுதுற்றுக் காட்சியளிக்கிறது. காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் இத்தலத் திருக்கோயிலில் சுவாமி அம்பாள் விநாயகர் முருகன் கோயில்களைத் திருப்பணி செய்து அருள்கின்றார்கள். இராஜகோபுரவாயிலைக் கடந்தவுடன் வெளிப்பிரகாரம் உள்ளது.

சுவாமி சந்நிதியில் நந்தி பலி பீடங்கள் கொடிமரம் ஆகியன காட்சி தருகின்றன. வலமாக வந்தால் மேற்குப் பிராகாரத்தில் முதலில் இத்தலத்திற்குரிய செல்வ விநாயகரைத் தரிசிக்கலாம்.

விநாயகரைவழிபட்டு வலமாக வந்துமுருகனைவழிபடலாம். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற இம்முருகன் ஆறு திருமுகங்களோடும் வள்ளி தெய்வானை சமேதராய் மயில் மீது அமர்ந்து காட்சிதருகின்றார். இவருக்குச சித்திராபௌர்ணமியன்று சிறப்பு வழிபாடுகள் நிகழ்கின்றன. அடுத்த, பழமை வாய்ந்த தலமரம் கொன்றை உள்ளது. வலமாக வந்தால் அம்பாள் அருள்மிகு அம்புசாக்ஷி அம்பாள் திருக்கோயிலைத் தரிசிக்கலாம். திருக்கோயிலுக்கு இடப்பக்கம் கிழக்குநோக்கி உள்ளது. அம்பாள் சந்நிதியில் தனிக்கொடிமரம் நந்தி பீடங்கள் காட்சி தருகின்றன. அம்பாள் கோயில் கோஷ்டங்களில் இச்சாசக்தி, பிராமி, வைஷ்ணவி, துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேசுவர் கோயில் தனியே உள்ளது.

அம்பாள் கோயில் கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபம் மகா மண்டபம் முதலியவற்றோடு காட்சி தருகிறது. அம்பிகை நான்கு திருக்கரங்களுடன் விளங்குகிறார்.

வலமாக வந்து சுவாமி சந்நிதியை அடைந்தால் கோபுர வாயிலில் விநாயகர் முருகன் ஆகியோர் விளங்குவதைக் காணலாம். சுவாமி சந்நிதியின் பலகணி மட்டுமே உள்ளது. இடப் பக்கமாகவே கோயிலை நாம் அடையலாம். கோயில் சோழர்காலக் கட்டிட அமைப்பில் கருங்கல் திருப்பணி யோடு காட்சிதருகிறது.

முதலில் அலங்கார மண்டபம் உள்ளது. உள்ளே சென்றால் சபாமண்டபம் காட்சித்தருவதைக் காணலாம். சுவாமி கோயில் வாயிலில் இத்தலத்தின் புராணவரலாற்றுப் படைப்புச் சிற்பம் உள்ளது.

சிவபிரான் சந்நிதியில் அணைய இருந்த விளக்கை எலி தூண்டிவிடுவது, பெருமான் அருளால் எலி மாவலிச்சக்கரவர்த்தி யாய்த் தோன்றுவது, திருமால் வாமனராய்ச் சென்று மூன்றடி மண் கேட்பது, உலகளந்த பெருமாளாய்க் காட்சி தந்து மாவலியை அழிப்பது, கொலைப் பழி தீரத்திருமால் சிவபிரானை வழிபடுவது ஆகிய காட்சிகள் இச்சிற்பங்களில் காட்சி தருகின்றன.

உள்ளே சென்று மகாமண்டபத்தைக் கடந்து அர்த்த மண்டபத்திற்கு அருகில் நின்று சுவாமி சந்நிதியை அடைந்து திரைச் சீலையில் பிமருத்திரரை வணங்கி வாமனபுரீசுவரரை வழிபடலாம்.

சோழர்காலக் கட்டிடக்கலைப் பாணிகளும் கல்வெட்டுக் களும் ஆங்காங்கே உள்ளன. (தொடரும்)

சீகாழியில் திருமுலைப்பால் திருவிழா

மூன்று வயதுக் குழந்தையாக இருந்து அம்மையே அப்பா என்றழுதருளிய காரணத்தினால் இறையருள் தோய்ந்த ஞானப் பாலை அம்பிகை ஊட்ட உண்டு மகிழ்ந்தவர் திருஞானசம்பந்தர் ஆவார். அவர் அவதரித்ததலம் சீகாழியம்பதி ஆகும். அப்பதி யில் ஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட ஐதிக விழா ஆண்டு தோறும் தருமை ஆதீனத்தின் சார்பில் மிகச்சிறப்பாக நடை பெற்று வருகிறது. அவ்விழாவை ஒட்டிப் பல்லாண்டுகளாகத் திருமுறைப்பணி செய்துவரும் ஓதுவாமூர்த்தி ஒருவருக்குத் 'திருமுறைக் கலாநிதி' என்னும் பட்டம்பொறித்த பொற்பதக்கம் வழங்கி ஆயிரத்து ஒருரூபாய் அடங்கிய பொற்கிழி ஒன்றை அளித்துப் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்வது வழக்க மாகும்.

அவ்வகையில் இவ்வாண்டுச் சித்திரைத்திங்கள் 13ஆம் நாள் (25—4—85) வியாழக்கிழமை நிகழஇருக்கும் திருமுலைப்பால் ஐதிக விழாவில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிக்கல் ஸ்ரீ நவநீதேஸ்வரர் ஆலயத்தில் ஓதுவாராகப் பணியாற்றிவரும் திரு. வை. கல்யாணசுந்தரதேசிகர் அவர்கட்கு அப்பட்டத்தை வழங்கியருளிச் சிறப்புச்செய்தருளுவார்கள்.

திரு. வை. கல்யாணசுந்தர தேசிகர் அவர்கள் தம் தந்தையார் திரு. வைத்தியநாத தேசிகர் அவர்களிடம் முறை யாகத் தேவாரம் பயின்றவர். பின்னர் தருமபுரத்தில் தங்கிக் கொண்டு மயிலாடுதுறையில் திரு. கே. வி. ராஜாராமய்யர் அவர்களிடம் நான்கு ஆண்டுகள் சங்கீதப் பயிற்சி பெற்றார். அதன்பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைக் கல்லூரியில் ஓர் ஆண்டு (1947-48) சிறப்புப் பயிற்சி பெற்றுச் 'சங்கீதபூஷணம்' சான்றிதழ் பெற்றார். 1967 இல் தாய்லாந்து பெங்கோக்கில் மகாமாரியம்மன் திருக்கோயிலில் 6 மாதகாலம் பூசையும் திருமுறைப்பணியும் செய்து வந்தார். 62 வயது நிரம்பி யுள்ள இவர் இதுபொழுது (1956 முதல்) சிக்கல் ஸ்ரீநவநீதேஸ்வர சுவாமி திருக்கோயிலில் திருமுறைப்பணி புரிந்து வருகின்றார்.

சீகாழி திருமுலைப்பால் திருவிழாவில் 25—4—85 முதல் 29—4—85 வரை நாள்தோறும் மாலை 6-30 மணி அளவில் திருமுறை மாநாடும் தேவார இசையரங்குகளும் நடைபெறும். திருஞானசம்பந்தப் பெருமான் ஞானப்பால் உண்ட இந்த ஐதிக விழாவினைச்சைவர்கள் அனைவரும் கொண்டாடவேண்டி யதும் திருமுலைப்பால் உற்சவத்தைக் கண்டு கண்பெற்ற பயனைப் பெறவேண்டியதும் இன்றியமையாக் கடப்பாடு களாகும்.

திருவாமூரில்

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா

தேவாரப் பணியும் உழவாரப் பணியும் செய்து எண்ப தாண்டுக் காலம் இம்மண்ணுலகில் வாழ்ந்து இறையடி நிழல் அடைந்தவர் அறந்தரு நாவுக்கரசர் ஆவார். அவர் அவதரித்த புண்ணியத் தலம் திருவாமூர் ஆகும். அத்தலத்தில் ஆண்டு தோறும் சித்திரைச் சதயநாளில் திருநாவுக்கரசர் குருபூஜைவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றுவருகிறது. அவ்வமயம் பல்லாண்டு களாகத் திருமுறைப்பணி செய்துவரும் ஓதுவாமூர்த்தி ஒருவ ருக்குத் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் "திருமுறைக் கலாநிதி" என்னும் பட்டம் பொறித்த பொற் பதக்கம் வழங்கி ஆயிரத்து ஒருருபாய் அடங்கிய பொற்கிழி ஒன்றை அளித்துப் பொன்னுடை போர்த்திச் சிறப்புச்செய்து வருகிறார்கள். அவ்வகையில் இவ்வாண்டுச் சித்திரைத்திங்கள் 31 ஆம் நாளில் (13—5—1985) திங்கட்கிழமை நிகழ இருக்கும் குருபூஜைவிழாவில் தருமையாதீனம்ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தில் திருமுறைப்பணியாற்றி வரும் திரு. T. M. சபாபதி அவர்கட்கு அப்பட்டத்தை வழங்கி யருளிச் சிறப்புச்செய்தருளுவார்கள். திரு. சபாபதி அவர்கள் பழனி திரு. சம்பந்தம் பிள்ளை அவர்களிடம் பயின்றவர். பல்லாண்டுகளாகத் திருமுறைப்பணியினைச் செய்துவருபவர் இதுபொழுது திருவாவடுதுறை ஆதீனத்தில் திருமுறைப்பணி செய்துவருகின்றார்.

திருநாவுக்கரசர் குருபூஜை விழாவினை ஒட்டித் திருமுறை மாநாடும் தேவாரப்பண்ணிசை அரங்கும் நிகழ்வுறும். ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாவினைச் சைவர்கள் கொண்டாட வேண்டியதும் குருபூஜை விழாவில் கலந்துகொண்டு பயன் பெறவேண்டியதும் அவசியமாகும்.

சித்திரைச் சதயத்து அப்பர், சிறந்த வைகாசி மூலத்து
அத்தரைப் பணி சம்பந்தர், ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாத வூரர், முதியநல் ஆடிதன்னில்
சுத்தமாம் சுவாதி நாளில் சுந்தரர் கைலை சேர்ந்தார்.

கட்டுரை எண். 58

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., B. Lit., D. P. P. A., D. U. N., I. U.
பருத்தியூர்.

அருணம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணம் புயமுலைத் தையல் நல்லாள் தகைசேர் நயனக்
கருணம் புயமும் வதனம் புயமும் கராம்புயமும்
சரணம் புயமும் அல்லாற் கண்டிலேன் ஒருதஞ்சமுமே.57

அ. அருணம் புயத்தும் என் சித்தாம் புயத்தும்
அமர்ந்திருக்கும் தருணம் புயமுலைத் தையல்நல்லாள்.

(1) சிவந்த தாமரையிலும் எனது மனமாகிய தாமரையிலும் எழுந்தருளியிருக்கும் தாமரை மொட்டுப் போன்ற திருமுலைகளை உடையவள் - பெண்ணின் நல்லாளாகிய அபிராமியாவாள்.

(2) தாமரையினை அமரும் இடமாகக் (ஆஸனமாகக்) கொண்டிருக்கிருள் அம்பிகை. எனவே அவளை 'பத்மாஸனா' என்று சகஸ்ரநாமம் புகழுகிறது. 'அம்புயமேல் திருந்தியசுந்தரி' என்றும் 'அம்புயாதனத்து அம்பிகையே' என்றும் முன்னர் அழைத்தார். "அல்லியந்தாமரைக் கோயில் வைகும் கோமள வல்லி" என்பார் பின்னும்.

(3) "அடுக்குத் தாமரை ஆதியிருப்பிடம்" எனத் திருமந்திரம் அவளது இருப்பிடத்தை அடுக்காக இதழ்கள் அமைந்த தாமரை எனக்குறிப்பிடுகிறது.

(4) தாமரை வடிவத்தில் ஸ்ரீ சக்ரத்தில் வரையப்படும் கோடுகளைக் கருதியும் அவளது இருப்பிடம் தாமரை எனலாம். அவ்வாறே மூலாதாரக் கமலம் முதலாக சகஸ்ர கமலம் ஈறாக உள்ள தாமரைகளை இருப்பிடமாகக் கொள்ளுவதால் 'அருணம் புயத்தில்' அமர்பவளாகக் கொள்ளலாம். அருணம்—சிவப்பு. அம்புயம்—தாமரை.

(5) மேற்கண்ட தாமரைகளில் வசிப்பவள் தனது சித்தமாகியதாமரையிலும் அமர்ந்திருக்கிருள் என்கிருர்.தெய்வம் இருக்கும் இடம் கோயில் ஆவது போல் அம்பிகை அமரும் சித்தமாகிய இடமும் தாமரை ஆகிவிடுகிறது. அடியவரின் மனம் என்னும் தாமரையில் எழுந்தருளுவதால் திருவள்ளுவரும் இறைவனை "மலர் மிசை ஏகினன்" என்ருர்.

(6) பொய்கையில் தாமரை மலருகிறது. தாமரையில் அன்னப்பேடு விரும்பி அமருகிறது. அம்பிகையாகிய அன்னப் பேடு அடியவரின் மனப்பொய்கையில் மலர்ந்தசித்தாம்புயத்தில் அமருகிறது. இதனை சகஸ்ரநாமம் 'பக்த மானஸ ஹம்ஸிகா' என்கிறது.

(7) தருணம் புயம் என்ருல் மலர்வதற்குத் தயாரான நிலையில் இருக்கும் தாமரை என்பது பொருள். அதாவது அம்பிகை தாமரைமொட்டுக்களையொத்த திருமுலைகள் உடைய வளாக இருக்கிருள். "முகையே முகிழ்முலை" என்பார் பின்னும். அவளது என்றும் அழியா இளமையழகின் சிறப்பு இதனுல் விளங்குகிறது.

(8) பர, அபர ஞானங்களாகிய தருணம்புயமுலை தக்க தருணத்தில் ஞானங்களை அளிக்கத் தயாரான நிலையில் இருக் கிறது. 'அம்மே!' என்று அழைத்த தருணத்தில் அருகில் வந்து குழைத்தளித்த பெருமைமிக்கது. அப்பேருள் கூர் திருத்தன பாரமுடையவளை, ஆளுடைய பிள்ளையார் "பெண்ணின் நல்லாள்" என்று போற்றினர்.

(9) பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து வரும் கருணையினுலும், அனைத்துயிருக்கும் அக்கருணையினை வழங்கக் காத்திருப்பதாலும் தருணம் புயமுலைத் தையல் நல்லாள் என்ருர்.

ஆ. தகைசேர் நயனக் கருணும் புயமும்
வதனம் புயமும் கராம்புயமும் சரணும்
புயமும் அலலாற் கண்டிலேன ஒரு தஞ்சமுமே.

(1) அவளது தகுதி சேர்ந்த கண்களாகிய தாமரைகளும் முகத்தாமரையும், கைத்தாமரைகளும் திருவடித்தாமரைகளும் அல்லாது நமக்கு வேறு அடைக்கலம் இல்லை என்கிருர்.

(2) நயனம் – கண். நயனக்கருணும்புயம் என்றால் கண்களாகிய கருணைமிக்க தாமரைகள் என்பது பொருள். வதனம் – முகம். வதனும்புயம் – முகத்தாமரை. கராம்புயம் – திருக்கைகளாகிய தாமரைகள். சரணம் – திருவடி. சரணும்புயம் – திருவடித் தாமரைகள்.

(3) 'பத்ம நயனு' – 'தாமரைக் கண்ணி' என்று சகஸ்ர நாமம் கூறும். 'முண்டகக் கண்ணி' என்ற பெயருடன் சென்னை மயிலையில் கோயில் கொண்டிருக்கிருள் அன்னை. 'ஸ்ரீ பதாம் புஜா' என்று திருவடியினையும் குறிப்பிட்டுப் பின்னும் 'நளினி' என்கிறது சகஸ்ரநாமம். தாமரைக் குவியலாக இருப்பவள் என்பது அதன் பொருள்.

(4) 'தாமரைக் காடனைய மேனி' என் மணிவாசகர், இறைவனின் திருமேனியைப் புகழ்வார். "கருமுகில் தாமரைக் காடு பூத்தது" என இராமனை வருணிப்பார் கம்பர்.

(5) மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனுஹதம் விசுக்தி, ஆக்ஞை, சகஸ்ரஹாரம் ஆகிய ஏழு தாமரை போன்ற இடங்களில் அம்பிகை குண்டலினி வடிவில் எழுந்தருளுவதாக யோக நூல்கள் குறிப்பிடும். இப்பாடலில் 1. அருணும்புயம் 2. சித்தாம்புயம் 3. தருணும்புயம் 4. நயனக் கருணும்புயம் 5. வதனும்புயம் 6. கராம்புயம் 7. சரணும்புயம் என ஏழு முறை தாமரையினைக் குறிப்பிடுதல்சிந்தித்தற்குரியது. பதினன்கு உலகங்களுக்கு அவளே அடைக்கலம் தருபவள். ஆகவே இருக்கை ஒன்று, சித்தம் ஒன்று, திருமுலை இரண்டு, கண்கள் மூன்று, வதனம் ஒன்று, கரங்கள் நான்கு, திருவடிகள் இரண்டு, ஆக விரிக்கிற் பதினன்கு தாமரைகளும் கணக்காகிறது.

இ. தாமரையின் சிறப்புக்கள்.

முப்பது பாடல்களே உள்ள சரசுவதியந்தாதியில் கம்பர் மூன்று பாடல்களில் தாமரையின் சிறப்பினைக் கூறிக்கலை மகளுடன் தொடர்பு படுத்தி வருணிக்கிருர்.

நாயகமான மலரகமாவதும், ஞானவின்பச்
சேயகமான மலரகமாவதும், தீவினையால்
ஏய் அகமாறி விடுமகமாவதும், எவ்வுயிர்க்கும்
தாயகமாவதும் தாதார் சுவேத சரோருகமே.

அதாவது, மலர்களில் தலைமையான மலராவதும், அறிவு இன்பம் என்னும் குழந்தை வளரும் மலராவதும், பாவத்தினால் உண்டான செருக்கு மாறுவதற்கு உரிய இடமாவதும், எல்லா உயிர்களுக்கும் தாய் வீடாவதும் கலைமகள் அமரும் மகரந்தத் தாள் நிறைந்த வெண்தாமரை மலரே ஆகும் என்கின்றார்.

வடமொழி, தென்மொழி, பிறமொழி இலக்கியங்கள் யாவும் தாமரையினைச் சிறப்பிக்கின்றன. வடமொழியில் கமலா, பத்மா, நளினா, அம்புஜா எனத்தாமரையினைக் குறிக்கும் சொற்கள் 'ஆ' காரத்துடன் ஒலிக்கின்றன. எனவே அது பெண்பாலுடன் தொடர்புடைய அமைப்பு எனவும் அஃது தேவிக்கே உரியதெனவும் மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும், அவர்கள் தாமரைவித்து 'சிரஞ்சீவித்வம்' வாய்ந்தது எனவும் சிறப்பிக்கின்றனர். டாக்டர் ஒகா என்னும் ஆராய்ச்சியாளரிடம், ஜப்பானில் டோக்கியோ நகருக்கு அருகில் நடந்த அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட பானையில் அடைக்கப்பட்டிருந்த தாமரை வித்துக்கள் அளிக்கப்பட்டன. அவ்வித்துக்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புதையுண்டவையென அமெரிக்கநாட்டு வல்லுனர்களும் நவீன முறையில் சோதித்து அறிந்து கூறினர். டாக்டர் ஒகா அவற்றை விதைத்த பொழுது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய அவ்விதைகள் சிறப்பாக முளைத்தெழுந்து தாமரைக் காடாய்ப் பூத்துக்குலுங்கியன!

இந்திய மொழிகள் எல்லாவற்றிலுமே தாமரையினைக் குறிப்பிடும் சொற்கள் ஏராளமாகக் காணப்படுகிறன்றன.

நளினகாந்தி, கமலா மனோகரி, சரோஜப்பிரியா என்பன போன்று முப்பத்தொரு இராகங்களின்பெயர்கள் தாமரையுடன் தொடர்புடையனவாக இருப்பதனை இசைவாணர்கள் எடுத்தியம்புகின்றனர். அத்துடன் அவையனைத்தும் அம்பிகையினைச்சுட்டும் பெயர்களாவும் அமைந்திருக்கின்றன. 'தமிழர் பண்பாட்டில் தாமரை' என்ற ஆய்வு நூலில் மேலும் பல வியத்தகு செய்திகளை அறியலாம்.

அம்பிகை தாட்சாயணியாகவும், பார்வதியாகவும் உருவெடுத்த பொழுது தாமரை மலரிலேயே தோன்றினாள். முருகப்பெருமானும் "வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந்து" அருளினான்.

இச்சிறப்புக்கள் எல்லாம் பெற்ற தாமரையினை அப்பர் பெருமானும் தம் நமச்சிவாயப் பதிகத்துள் "பூவினுக்கருங் கலம் பொங்கு தாமரை" எனப்புகழ்ந்தார்.

" அடுக்குத் தாமரை ஆதி இருப்பிடம்
எடுக்குந் தாமரை இல்லகத் துள்ளது
மடுக்குந் தாமரை மத்தகத்தே செல
முடுக்குந் தாமரை முச்சதுரத்தே.

இவ்வாறு திருமந்திரம் தாமரையின் தொடர்பினை எடுத்து உரைத்தது.

திருமுகங் கமலம், இணைவிழி கமலம்;
செய்யவாய் கமலம், நித்திலந்திகழ்
வருமுலை கமலம், துணைக்கரங் கமலம்,
வலம்புரி யுந்தி பொற் கமலம்,
பெருகிய அல்குல் மணித்தடங் கமலம்,
பிடிநடைத்தாள்களும் கமலம்
உரு அவட்கு அவ்வாறு ஆகலின் அன்றே
உயர்ந்தது பூவினுட் கமலம்

வள்ளிநாயகியின் அங்கங்கள் இவ்வாறு தாமரையாய் அமைவதால்தான் பூவினுள் தாமரை ஏற்றம் பெற்றது என்கிறது தணிகைப் புராணம்.

நீண்ட இளமை நலம் எய்துதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

குருமணியின் அருள்மொழி

நல்லபண்பு

குடும்பத்தலைவனிடம் தலைவி வணங்கி நடக்க வேண்டும். தலைவன்-தலைவியாகிய பெற்றோர் களிடம் பிள்ளைகள் வணங்கி நடக்க வேண்டும். இந்த நல்லபண்பு ஒவ்வொரு வீட்டிலும் வளர்ந்தால் நாட்டிலும் நல்லபண்பு மலரும்.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

திருவருட்பாத் திரட்டு

(பொழிப்புரையுடன்)

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ.,

(மலர் 44, இதழ் 4, பக்கம் 222 இன் தொடர்ச்சி.)

சீருலவு முன்பாத தாமரை வணங்கினோர்
திசைமுகனும் வெண்பாற்கடல்
செம்மணிக் கண்ணர வணைக்கமல நயனனுந்
தேவர்கோ னும்புட்பகம்
ஊருங் குபேரனும் பானுவொடு மதியுமா
யொழியாம லேபாலன
மோடுபொன் னுடைதரு திருவுள சகாயமரு
ளுடையராய் வீற்றிருப்பார்
பாரிலா சாபாச மெல்லா மும் விட்டுன்
பதாம்புயத் துணையை நம்பிப்
பரமபாகீரதி வளந்தருங் காசியே
பரமென்று வந்தவடியேன்
ஆரிடஞ் சென்றிரப் பேன்புத்தி முத்தியாம்
ஐயனுட னுன்னையன்றி
அண்டகோ டிகள்பணி யகண்டபூ ரணியென்னும்
அன்னபூ ரணியன்னையே. (8)

(பொ-ரை) புகழ்பொருந்திய உன்பாததாமரையை வணங்கினோர்கள் திசைதோறு முகமுடையவனாக, வெண்ணிறப்பாற்கடலில் செங்கண்ணுடைய அரவில்துயிலும் தாமரைக் கண்ணனாக, தேவர்களின் தலைவனாகிய இந்திரனாக, புட்பகத்தேரில் செல்லும் குபேரனாக, சூரியனாக, சந்திரனாக இருந்து – பால் அன்னத்தையும் பொன்னையும், ஆடையையும் தருகின்ற உன் திருவுள இசைவினை ஒழியாமல் பெற்றதோடு அருளுடையராயும் வீற்றிருப்பார்கள். உலகில் ஆசை பற்றுக்களை எல்லாம் விட்டு உன் திருவடித்தாமரைகளான துணையை நம்பி, மேலான கங்கை வளம் தருகின்ற காசியே உயர்வென்று வந்த அடியே

புத்தியாகவும் முத்தியாகவும் உள்ள ஐயனுடன் உன்னையன்றி யாரிடம் சென்றிரப்பேன். திருவுளக் கருணையை எனக்கும் அளித்திடுக அன்னபூரணி அன்னையே.

(கு-ரை) திருவடி பணிந்தோர் பெற்ற பேற்றை -

" வீரவும் புதுமல ரிட்டு நின்பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும்குலிசமும் கற்பகக்காவும் உடையவரே"(அபி.அந்.83)

என்று குறிப்பிடுவார் அபிராமிப்பட்டர்.

சீகாழி நகரினிற் சமபந்த ருக்குநீ
திருமுலைப் பால் கொடுத்தாய்
திகழுமலைபஞ் ஞீலியி லன்னம் சமைத்தருள்
திருநா வினுக்கரசுண
நீகாவ லன்சிவன் கையிற் கொடுத்தாய்
நிறைந்தகுரு காவூரினில்
நேசமுட னேசமைத் தேயிடுங் கட்டமுதை
நின்மலன் கைக்கொடுத்தே
நோகாம லேபசியி லாரூர ரடியரொடு
நுகரவருள் செய்து நின்றாய்
நோயினுன் முன்னிலையி னுலுனது காசியில்
நொந்தவடி யேற்களிக்க
ஆகா தெனத்திரு வுளத்தி லடையாமலே
யன்னம படைத்தருள்வாய்
அண்டகோ டிகள்பணி யகண்டபூ ரணியென்னும்
அன்னபூ ரணியன்னையே. (9)

(பொ-ரை) சீகாழி நகரில் திருஞானசம்பந்தருக்கு நீ திருமுலைப்பால் கொடுத்தாய். விளங்கும் பைஞ்ஞீலி எனுந் தலத்தில் அருளுடன் அன்னமமைத்துத் திருநாவுக்கரசருண்ண நீ காவலனும் சிவன் கையில் கொடுத்தாய். குருகாவூரினில் நிறைந்த அன்புடன் சமைத்த கட்டமுதை நிர்மலனும் இறைவன் கைக்கொடுத்துப் பசியாற ஆரூரர் அடியரொடு நோகாமல் நுகர அருள் செய்தனை. காசியில் நோயினுலும், பழையசஞ்சித வினையினுலும் நொந்து நிற்கும் அடியேற்களிக்க ஆகாதெனத் திருவுள்ளத்தில் எண்ணுமல் அன்னம் படைத்தருள்க அன்னபூரணியே.

(கு-ரை) சீகாழி-சிதம்பரத்தில் நடராஜப் பெருமானோடு வாதாடிய குற்றம் நீங்க-காளி இத்தலத்தில் பூசித்தமையால் 'காளிபுரம்' என்று இருந்து-பின் ஸ்ரீகாளி-சீகாழி என மருவியது. திருமுறை 2-73-5 ஆம் பாவுக்கு அமைந்த குறிப்புரையில் திரு. முத்து. சு. மாணிக்கவாசகர் அவர்கள் (வெளி. எண்-317. த. ஆ. பதிப்பு - 1954) தமிழ்க்காழி என்றதால் ஸ்ரீ காளிபுரம் என்றதன் திரிபு என்ற கூற்று ஆராயத்தக்கது - எனக் குறித்துள்ளார். ஞானசம்பந்தராம் பிள்ளைக்கு அருளை நேராகவும் - அடியராம் நவுக்கரசர்-நண்பராம் சுந்தரர் இவர்களுக்குச் சிவன் மூலமும் இறைவி அருளிய பாங்கு - உன்னி மகிழ்தற்குரியது. சக்தியின்றிச் சிவனில்லை - என்ற உண்மையும் உணர்த்தப் பட்டது.

பிராம நா ராயணி ரவுத்திரி மயேச்சுரி
பெலமனோன் மனிநாதமாம்
பெரியவர சிவசக்தி யோங்குங் கிரியாசத்தி
பிரிவிலா ஞானசத்தி
சராசரமு நிறையுமிச் சாசத்தி யாதியாந்
தருதிரோ தானசத்தி
சர்வபூ ரணபரா சத்திசிவ சமவாய
சர்வக்ஞ சூடாமணி
வராகவவ தாரஅம் மால்மருக ரென்னவே
மக்களைப் பெற்றதாயே
மகிழ்விசா லாக்ஷியுன் னடியருக் கடியனேன்
மரணமங் களகாசியில்
அராவின்விட மென்னவரு மெய்ப்பிணி யொழித்தே
அநாயாச மரணமருள்வாய்
அண்டகோ டிகள்பணி யகண்டபூ ரணியென்னும்
அன்னபூ ரணியன்னையே. (10)

(பொ-ரை) எல்லாவற்றிலும் முற்றாக நிறைந்த பராசக்தி, சிவனோடு அபின்ன சம்பந்தமுடைய - பிரியாத முற்றுணர் சூடாமணியாக இருப்பவள், பிரம்மனிடம் பிராமியாக, நாராயணனிடம் நாராயணியாக - உருத்திரனிடம் - ரவுத்திரியாக, மகேசுரனிடம் மகேசுவரியாக, சதாசிவனிடம் - பலமுடைய மனோன்மனியாக, நாதத்திடம்-விந்துவாக, சிவத்திடம் - சக்தியாக விளங்குகிறாள்.

பின்னும் அதே ஆதிசக்தி – கிரியாசக்தி – ஞானசக்தி சராசரத்தினுள் நிறைந்த இச்சாசக்தி – திரோதானத்தைத் (மறைப்பை) தருஞ்சக்தி எனப் பஞ்சசக்தியாகவும் விளங்குகிருள். அப்படியான விசாலாக்ஷியே! பன்றியின் வடிவெடுத்து நிலங்கிளைத்த திருமாலுக்கு மருமக்களாம்படி விநாயகனையும் வேலவனையும் பெற்ற அன்னையே! உன்னடியாருக்கு அடியவனுகிய எனக்கு மரணமே மங்களமாய் அமையும் காசியில் பாம்பின் விடம் போன்ற கொடிய உடல் நோய்களை ஒழித்து வருத்தமில்லாத மரணத்தினை அருளிடுவாய்.

(கு–ரை)

“ பரையாதி விருப்பறிவு தொழிலாகி யுலகமெலாம்
படைத்துக் காத்து
வரையாது துடைத்து மறைத் தருளியவை நின்றுந்தன்
வடிவு வேருய்
உரையாதி மறைகடந்த வொருமுதல்வி ’ – இருக்கிருள்

(திருவிளை – தடாத – அவதா – 22)

காசியில் இறப்புக்குத் தீட்டில்லை -- என்பதை மரணமங்கள காசி என்பதால் நினைக்க – அராவின் விட ....பிணி ‘ அங்காளம் போலாம் அருநோய் ’ – என முன்னேயும்வந்தது காண்க–(4–7)

(தொடரும்)

உலகத்தின் நன்மைக்கே எல்லாம் நடக்கிறது. பூத அணுக்கள் சேருவதும் பிரிவதுமே எல்லாப் பொருள்களின் தோற்றத்திற்கும் காரணம். அணுக்களான மக்கள் தேகங்களும், போவதும் கூடுவதும் பிரிவதும் உலக அமைப்புக்கு அவசியமாகும் விதிவசத்தால் நடப்பதும்கூட உலக அமைப்புக்கு வேண்டியதே ஆகும். சகலமும் தெய்வாதீனமே. அதற்கு மாருக ஓர் அணுவும் அசையாது. உலகத்தின் ஒரு பாகமாகிய நீ உலகத்திற்காக நடக்கும் எதையும் துக்கமாக எண்ணக்கூடாது.

— ரோமானிய சக்கரவர்த்தி
மார்க்ஸ் அரேலியஸ்
(கி. பி. 111—180)

கதிரவன் குடும்பம்

5. சுக்கிரன் கிரகம்

சுக்கிரன் என்னும் கிரகம் வெள்ளி என்றும் அழைக்கப்படும். இஃது ஆங்கிலத்தில் " வீனஸ் " (Venus) என்று பெயர் பெற்றுள்ளது. வீனஸ் என்ற பெயரை ரோமானியர் தம் அழகுத் தெய்வத்திற்கு இட்டனர். சுக்கிரனின் அழகைக் கண்ட அவர்கள் அக்கிரகத்திற்கும் 'வீனஸ்' என்ற பெயரைச் சூட்டினர் போலும்.

புதனுக்கு அப்பால் கதிரவன் மண்டலத்தில் அழகுடன் திகழ்வது சுக்கிரன் ஆகும். சந்திரனுக்கு அடுத்தாற்போல் முன்னிரவிலோ அன்றிப் பின்னிரவிலோ வானத்தில் வனப்புடன் விளங்குவது இதுவே ஆகும். சுக்கிரன் கீழ்வானத்தில் சில நாட்களில் அதிகாலையில் முளைக்கின்றது. வெள்ளி விண்ணில் ஒரு சோதிமயமான வைரம் போன்று நெஞ்சை அள்ளும் நிலையில் மிளிர்கின்றது.

திண்மையால், எடையால், உருவ அமைப்பாலே சுக்கிரன் பூமியை ஒத்துள்ளது. பூமியுடன் பிறந்த இரட்டையர் போலச் சுக்கிரன் அமைந்துள்ளது. சுக்கிரனது சுற்றுவழி (Orbit) சற்றேறக்குறைய வட்ட வடிவமானது. சுக்கிரனது குறுக்களவு (விட்டம்) 7700 மைல் ஆகும். பகலவனிடமிருந்து சுக்கிரனது சராசரி தொலைவு தூரம் 6, 72, 00, 000 (ஆறுகோடியே எழுபத்து இரண்டு லட்சம்) கல்லாகும். சுக்கிரனின் திண்மை நீரின் திண்மையைவிட நாலரை மடங்கு அதிகமென வானநூல் வல்லுநர்கள் வகைப்படுத்தி மதித்துள்ளார்கள். இது பூமியின் எடையில் ஐந்தில் நான்கு பங்காகும். பூமியின் கவர்ச்சி விசையில் (Gravitation) பத்தில் ஒன்பது பங்கும் கொண்டுள்ளது. இந்தக்கிரகம் விநாடிக்கு 25 மைல் வேகத்தில் கதிரவனைச் சுற்றுகின்றது. இது ஒருமுறை சூரியனைச் சுற்றி வருவதற்கு 210 நாட்கள் ஆகின்றன. எனவே சுக்கிரன் கிரகத்தில்ஓர் ஆண்டுக்கு 218 நாட்கள் மட்டுமே. சுக்கிரன் ஒருமுறை தன்னைத்தானே சுற்ற முடிக்க பதினெட்டு நாட்கள் ஆகின்றன. ஆகையால் சுக்கிரனில் நாட்காலம் என்பது பூமியில் உள்ளதைப் போலப் பதினெட்டு மடங்கு அதிகமாக இருக்கும். சந்திரனைப்போலவே

சுக்கிரனும் சூரியனுக்கும் பூமிக்குமிடையில் சில நாட்கள் வருகின்றது. சுக்கிரன் பூமியோடும் கதிரவனேடும் ஒரே நேர்க் கோட்டில் வர 584 நாட்கள் ஆகின்றன. புதனைப் போலவே சுக்கிரனும் ஞாயிற்றுக்கு மேலும் கீழுமாக ஓர் ஊசலியைப் (Pendulum) போல் ஆடிக்கொண்டுள்ளது.

சுக்கிரன் பூமிக்கு அருகில் இருக்கும் பொழுது அஃதாவது கதிரவனுக்கும் பூமிக்கும் இடையில் உள்ள பொழுது – அதன் தொலைவு 2, 60, 00, 000 (இரண்டு கோடியே அறுபது இலட்சம்) மைல்களாகும். இஃது எதிர்ப்பக்கம் போகும்போது இதன் தொலைவு 160 கோடி மைல்களாகும். சுக்கிரன் பூமிக்கு அண்மையிலிருக்கும்போது இதன் இருண்ட பின்புற அரைக்கோளமே பூமியை நோக்கியுள்ளது. அந்த நிலையில் இது நமக்குப் புலனைவது கிடையாது. சுக்கிரன் பூமியை விட்டுத் தொலைவில் செல்லும்போது இதன் மீது பகலவன் ஒளிவிடும் பகுதியின் குறுக்களவு சிறிது சிறிதாக அதிகரித்துக் கொண்டேபோகும். பூமிக்கும் சுக்கிரனுக்கும் இடையே உள்ள தூரம் அதிகரித்து வருவதனல் நாம் காணும் அதன் பருமனும் வரவரக்குறைந்தே தோன்றும். திங்களைப்போல் சுக்கிரனும் வளர்பிறை, தேய் பிறைத் தோற்றங்களுடன் நமக்குப் புலனகிறது. இதனைத் தொலைநோக்கி மூலம் கண்டு அறியலாம்.

சுக்கிரன் கிரகத்தை மப்பு மூடிய வாயு மண்டலம் கப்பிக் கிடத்தலால் இதன் உண்மையான தோற்றத்தைத் தொலை நோக்கியைக் கொண்டு காண இயலவில்லை. இக்கோளிலிருந்து வீசும் கதிர்களை நிறமாலைமானியைக் (Spectroscope) கொண்டு சோதித்ததில் அவற்றில் ஒரு சிறிதேனும் உயிரியம் (Orygen) இருப்பதாகத் தெரியவில்லை. ஆனல் அதில் கரியமிலவாயு (Carbandioxide) மலிந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே இன்னும் இக்கிரகத்தில் உயிர் வகைகள் தோன்றவில்லை என்று அனுமானிக்க வேண்டியுள்ளது. இன்னுமார் உண்மையும் இதனை உறுதிப்படுத்துகின்றது. பூமியைவிட சுக்கிரன் கதிரவனுக்கு அருகில் இருப்பதால் இங்குக் கதிரவனது வெப்பம் அதிகமாகத் தாக்குகிறது. கரியமிலவாயு கலந்துள்ள வாயு மண்டலத்தை ஊடுருவி வெப்பக்கதிர்கள் வெளியேறுவதில்லை. ஆதலால் வெப்பம் வெளிவராமல் சுக்கிரனின் மேற்பரப்பிலேயே தங்கிவிடுகின்றது. இங்கு வெப்பம் 212°F அளவு உள்ளது. இது நீரின் கொதிநிலையாகும். இதில் மாபெரும் கடல்களும சதுப்பு நிலங்களும் நிறைந்திருக்கலாம் என வானசாத்திர வல்லுநர்கள் கருதுகிருர்கள்.

பூமியை நிலவு சுற்றியோடுவதைப் போல, புதனையும் சுக்கிரனையும் சுற்றியோடும் துணைக்கோள்கள் ஏதும் கிடையாது. பூமிக்கு உள்ளாக நிற்கும் புதனும் சுக்கிரனுமாகிய இந்த இரண்டு கோள்களும் கீழ்க்கோள்கள் (Inferior Planets) என்றும் வழங்கப்பெறும்.

— தொகுத்தளித்தவர்: சுவாமி வீரபாகு.

ஆதாரம் :

A Short History of The Universe
By Arther S. Gregor (1964) Newyork.

நாவலரின் நல்லுரைகள்

நாம் பிறருக்குத் தெரியாது செய்கிறோம் என்று செய்யும் காரியங்களை எல்லாம் கடவுள் கண்டு கொண்டே இருக்கிறார் என்பதை மறவாதே.

கடமை செய்யாது உரிமை விரும்புவோரிடம் கவலை குடிகொள்ளும். கடமை சரியாகச் செய்யப்பட்டால் கவலைக்கு இடமில்லை

ஒருவனுக்கு வாழ்வும் தாழ்வும் அவன் செய்யும் நற்கருமங்களையும் தீக்கருமங்களையும் பொருத்து ஏற்படுகின்றன.

மனநலம் உடையோருடைய கடுஞ்சொல்லும் இன்பம் விளைக்கும். மனநலம் இல்லாதவருடைய இன்சொல்லும் துன்பம் விளைவிக்கும்

— யாழ்ப்பாணநல்லூர் சைவப்பேராசான்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்.

நால்வர் காலம்

குடந்தை திரு. N. சேதுராமன் B. Sc., D. M. I. T,
Director, Raman & Raman Private Limited

சைவ உலகில், திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனரும், மாணிக்கவாசகரும் நால்வர் எனப் படுவர். நால்வரின் காலங்களைப் பல அறிஞர்கள் பலகோணத் தில் ஆய்ந்து உள்ளனர். அவர்களின் ஆய்வுகளும் அணுகு முறைகளும் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெருவிருந்தாய் அமை கின்றன. அடியேன் இவ்வாய்வில் இறங்குவதற்கு முன் அப் பெரியோர்களுக்கு எனது வணக்கத்தை முதற்கண் கூறி, ஆராய்ச்சியைத் துவக்குகிறேன். பலபுதிய செய்திகளை ஆங் காங்கே காணலாம்.

நால்வரின் கால ஆராய்ச்சிக்குமூலக் கருவூலங்களாகத்துணை நிற்பவை முறையே பாண்டியர் வரலாறு, பல்லவர் வரலாறு, பழங்காலச் செப்பேடுகள், கல்வெட்டுக்கள், வானசாத்திரம், தேவாரம், பெரியபுராணம ஆகியவை ஆகும். அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் ஆய்விற்கு அஸ்திவாரமாக அமைகின்றன. அவைகள் தக்க இடத்தில் குறிப்பிடப்படும்.

திருஞானசம்பந்தர் காலம் :

திருஞானசம்பந்தரின் காலத்தை ஆராய்ச்சி செய்வதற்கு முன்பாக, பாண்டியர்காலத்தையும், வம்சாவளியையும் அறிவது அவசியம். ஆரும் நூற்றுண்டு முதல் பத்தாம் நூற்றுண்டு வரை அரசாண்ட பாண்டிய மன்னர்கள் யாவர்? அவர்களின் காலம் எது? இவ்விஞக்களுக்குரிய விடைகளைப் பாண்டியர் செப்பேடு கள் பத்தும், அம்மன்னர்களின் கல்வெட்டுக்களும் நமக்கு அளிக்கின்றன. அண்மைக் காலத்தில் பாண்டியரின் வரலாறு விஞ்ஞான ரீதியாக ஆராயப்பட்டது. இவ்வாய்வின்படி ஆரும் நூற்ருண்டிலிருந்து பத்தாம் நூற்ருண்டு வரை அரசு புரிந்த பாண்டியரின் வம்சாவளிப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள் ளது 1. ஒவ்வொரு மன்னனது காலமும் எவ்வாறு நிர்ணயம்

E I. == Epigraphia Indica

S. I. I. == Soutn Indian Inscriptions Volumes

A. R. E. == Archaeological Report on Epigraphy.

1 பாண்டியர் செப்பேடுகள் பத்து - தமிழ் வரலாற்றுக் கழகம் - பதிப்பு 1967

செய்யப்படுகிறது என்பதைத்தக்க இடங்களில் சான்றுகளுடன் காண்போம்.

முற்காலப் பாண்டியர்

(1) பாண்டியன் கடுங்கோன் (சுமார் கி. பி. 550)
(களப்பிரரையொழித்து, மதுரையில் மீண்டும் பாண்டியப் பேரரசைத் தாபித்தவன்)

|

(2) மாறவர்மன் அவனி சூளாமணி

|

(3) சேந்தன்

|

(4) மாறவர்மன் அரிகேசரி (630–680)
(நெல்வேலிப் போரில் சேரனை வென்றான். புலியூரில் கேரளனை வென்றவன் – அநேக இரண்ய கர்ப்பம், துலாபாரம் தானங்களைப் பலமுறைசெய்தவன். பாண்டி நாட்டில் மங்கலாபுரம் என்ற ஊரை நிர்மானித்தான்).

|

(5) கோச்சடையன் ரணதீரன் (680–730)
(மங்கலாபுரத்தில் சாளுக்கியரைத் தோற்கடித்தான்)

|

(6) ஸ்ரீ மாறன் இராஜசிம்மன் (730–768)
(பல்லவ மல்லனை வென்றவன்)

|

(7) நெடுஞ்சடையன் பராந்தகன் – முதல் வரகுணன் (768-811)
(பரம வைணவன்)

|

(8) ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் (811–860)
(சேரனையும், சிங்களவரையும் வென்றவன்)

|

(9) சடையன் இரண்டாம் வரகுண வர்மன் சிவபக்தன் 863–911

(10) வீரபாண்டியன் 860–863

(11) சடையன் வீரநாராயணன் 866–911

|

(12) மாறவர்மன் இராஜசிம்மன் 911–931

|

(13) சுந்தரபாண்டியன்

(14) வீரபாண்டியன் 938–959

பாண்டியர் செப்பேடு பத்தில், குறிப்பாக வேள்விக்குடி செப்பேடுகள், சீவரமங்கல செப்பேடுகள், தளவாய்புரம் செப்பேடுகள், சின்னமானூர் பெரிய செப்பேடுகள் ஆகியவ களை ஊன்றிக் கவனித்தால் ஏழாவது மன்னனாகிய நெடுஞ் சடையன் பராந்தகனே முதல் வரகுணன் என்பதை எளிதில் அறியலாம் 2. சாளக்கிராமத்தில் உள்ள வரகுணஈஸ்வரமுடையர் கோயிலுக்குத் தேவதான நிலங்கள் இறையிலியாக அளிக்கப் பட்டன என்று கூறுகிறது 3. இதனால் ஸ்ரீ வல்லபன் தன் தந்தை வரகுணன் பெயரால் ஒரு சிவன் கோயிலை எழுப்பினான் என்பதை அறியலாம்.

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள இரண்டு கல்வெட்டுக் கள் நெடுஞ்சடையன் பராந்தகனாகிய வரகுணனுக்குஉரியவை, கரவந்தபுர ஆதிவாசி வைச்சியன், பாண்டி அமிர்தமங்கல வரையினனாகிய சாத்தன் கணபதி என்பான், சம்புவின் திருக்கோயிலையும், திருக்குளத்தையும் திருத்துவித்தான் என்றும், அவனது மனைவியாகிய நக்கன் கொற்றியார் துர்க்கைக்கும், சேட்டைக்கும் கோயில் எடுப்பித்தாள் என்றும் கல்வெட்டுக் களில் கூறப்பட்டுள்ளது. மன்னனின் ஆறும் ஆட்சி ஆண்டில் கலியுக வருடம் 3874–இல் தை மாதத்தில் இத்திருப்பணிகள் செய்யப்பட்டன 4. கல்வெட்டின் காலம் கி. பி. 774 சனவரி மாதம் ஆகும்.

மதுரைக்கு அருகில் உள்ள ஆனைமலை நரசிங்கபெருமாள் குடவரைக் கோயிலில் இம்மன்னனுக்குஉரிய இரு கல்வெட்டுக் கள் உள்ளன. மன்னனின் மந்திரியாகிய மதுரகவி என்னும் மாறன்காரி இக்குடவரைக் கோயிலை எடுப்பித்தார் என்றும், அவர் இறந்துவிடவே, அவரது தம்பியாகிய மாறன் எயினன் என்பவர் கோயிலைக் கட்டி முடித்தார் என்றும் கூறப்பட்டுள் ளது 5. இக்கல்வெட்டுக்களில், மன்னனின் மூன்றும் ஆண்டு, கலியுகவருடம் 3871, கார்த்திகை மாதம், ரேவதி நக்ஷத்திரம், ஞாயிற்றுக்கிழமை குறிக்கப்படுகின்றன. இதன் காலம் கி. பி. 770, நவம்பர் மாதம் நான்காம் தேதி ஆகும் 6.

---

2 E. I. XXXII page 271
3 E. I. XXVIII No. 7
4 E. I. XXXVI No. 5
5 S. I. I. XIV Nos 1 and 2; E. I. VIII No. 33;
6 E. I. XXXVI page 115

திருப்பரங்குன்றம், ஆனைமலைக் கல்வெட்டுக்களின் காலங்களைப் பின்னோக்கிக் கணக்கிட்டால், கி. பி. 768 – இல் சனவரியிலிருந்து நவம்பர் மாதத்திற்குள் ஏதோ ஒருநாளில் மன்னன் முடி சூடினான் என்பதை அறியலாம். நெடுஞ்சடையன் பராந்தகனாகிய முதல் வரகுணன் கி. பி. 768 - ல் முடிசூடியவன் என்னும் செய்தி ஆய்விற்கு ஒரு பலத்த அஸ்திரவாக அமைகிறது.

கி. பி. 770–க்கு உரிய ஆனைமலைக் கல்வெட்டில் மன்னனின் மந்திரியாகிய மதுரகவி என்னும் மாறன்காரி குறிப்பிடப்படுகிறார். இவர் நம்மாழ்வாருடன் தொடர்பு உடையவர் என்பதை இலக்கியங்களால் அறியலாம் 7. சீவரமங்கலச் செப்பேடுகள் நெடுஞ்சடையன் பராந்தகனாகிய முதல் வரகுணனை குரு சரிதை கொண்டாடியவன் என்றும், பரம வைணவன் என்றும் கூறுகின்றன 8. நம்மாழ்வார் வரகுணமங்கை என்னும் திருமால் தலத்திற்கு மங்களா சாசனம் அருளினர் என்பதும் அறியத்தக்கது. முதல் வரகுணனுக்கு சிரீவரன் என்னும் விருதுப்பெயர் இருந்ததைச் செப்பேடுகள் கூறுகின்றன. நம்வாழ்வார் சிரீவர மங்கை என்னும் தலத்திற்கு (நாங்குநேரி) மங்களாசாசனம் செய்துள்ளார். சிந்தனைக்குஉரிய இச்செய்திகளினால் முதலாம் வரகுணன் வைணவத்தில் பெரிதும் ஈடுபட்டவன் என்பதை அறியலாம்.

முதல் வரகுணனின் தந்தை மாறவர்மன் ராஜசிம்மன் ஆவான். ராஜசிம்மன் பல்லவமல்லனைத் தோற்கடித்ததாகச் செப்பேடுகள் கூறுகின்றன. இப்பல்லவ மல்லன் நந்திவர்மன் என்னும் பெயர் கொண்டவன். காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தவன். கி. பி. 730–இல் தனது பன்னிரண்டாவது வயதில் முடிசூடி 65 ஆண்டுகள் (கி. பி 795 வரை) அரசாண்டவன் 9. ஆகவே வரகுணனின்தந்தையான ராஜசிம்மனின் காலத்தைச் சுமார் 730 முதல் 768 வரை என்று கொள்ளலாம். ராஜசிம்மனின் தந்தை கோச்சடையன்ரணதீரன் ஆவான். இவன் சாளுக்கியர்களை மங்கலாபுரம் என்னும் இடத்தில் தோற்கடித்தான் என்று செப்பேடுகள் கூறுகின்றன. மங்கலாபுரம் என்பது பாண்டி நாட்டில் உள்ள ஊர். இவ்வூர் இவன் தந்தை மாறவர்மன் அரிகேசரியால் நிர்மாணிக்கப்பட்டது என்பதைப் பின்னால் காண்போம். இவன் காலத்தை 680 – இலிருந்து 730 வரை என்று கொள்ளலாம். பின் கூறப்படும் சரித்திர நிகழ்ச்சிகளும், ரணதீரனின் தந்தையின் காலமும் இக்கருத்திற்குத் துணை நிற்கும்.

(தொடரும்)

---

7 E. I. VIII page 319; S. I. I. XIV Introduction.

8 A. R. E. 1926 - 27 page 87; பாண்டியன் செப்பேடு பத்து பக்கம். XXIV.

9 E. I. XXIX page 92; S. I. I. IV No. 135 section 'd'- A. R. E. 666 of 1922 Nandipotavarman regnal year 65.

சமுதாயக்கட்டுக்கோப்பில் சரண்புகு!

டாக்டர் இரா. செல்வக்கணபதி எம். ஏ., பிஎச்., டி.,

விடுதலை பெற்று விட்ட வீராப்பில் தலைநி மிர்ந்து
நடையிடும் புதுமைப் பெண்ணே! நாளைஉன் உலகம்! என்றே
அட! சிலர் கூறும் பேச்சை அம்மநீ நம்பி டாதே!
தடந்தெரி யாமல் நாளை தவித்திடா திருக்கச் சொல்வேன்! (1)

ஆடவன் பிடியில் சிக்கி அழியவா பிறந்தோம் நாங்கள்?
மாடென உழைத்தும் எம்மை மதித்தது உண்டா ஆண்கள்?
வீடெனக் கிடந்தோம்! எம்மை விருப்புடன் நடத்தி னரா?
ஈடுபா டவர்பால் நாங்கள் எப்படிக் கொள்வ தென்றாய். (2)

பேசுவார்; எழுதிக் காட்டிப் பெருமிதம் கொள்ளச் செய்வார்!
ஏசுவார் வீடு வந்தே! இதயத்தைச் சொல்லால் கொல்வார்!
மாசிலாப் பெண்மை இன்றேல் மகத்துவம் இல்லை என்பார்!
வாசிநீர் பெண்மைவாழ வழிவிட மாட்டார் அம்மா! (3)

இத்தனைத் தெரிந்தும் பெண்ணே ஏனொரு ஆட வன்தோள்
நத்திநீ விரும்பு கின்றாய்! நரகென வெறுத்தா யில்லை!
எத்தனைச் செலவு செய்தே ஏற்றினர் வாழ்க்கைத் தேரில்!
தத்துவம் அறிய மாட்டாய்! தடுமாறிக் கலங்கு கின்றாய்! (4)

மணமிலா வாழ்வை நாடின் மதித்திடா துன்னைத் தூற்றும்!
கணவனைப் பிரிந்து வாழ்ந்தால் களங்கமே கற்பிப்பார்கள்!
குணமிலான் கணவன் என்று கூறினும் வற்பு றுத்தி
மணமகன் இல்லம் நோக்கி மடக்கியே செலுத்தும் உன்னை! (5)

ஆண்மையை வெற்றி கொள்வாய்! ஆடவன் தன்னை ஈன்ற
நாண் இலாப் பொன்வி ரும்பும் நாரியை மாமி யாரை
மாண்புற வெற்றி கொண்டு மாட்சிமை பெறவும் கூடும்!
காண்கநீ சமுதா யத்தின் கட்டினை வெல்ல மாட்டாய்! (6)

தமிழர்கள் வாழ்க்கை இன்னும் தடுமாறு திருப்ப தற்கும்,
இமிழ்கடல் உலகில் நம்மை யாவரும் போற்று தற்கும்
அமிழ்தென இல்ல றத்தின் ஆணிவேர் உயிர்ப்பதற்கும்
தமிழ்ச்சமு தாயம் கண்ட தத்துவம் இதுதான் அம்மா! (7)

ஆயிரம் துயரி ருந்தும் ஆணொடு பெண்மை கூடி
மாயிரும் உலகில் வாழும் மாட்சிமை மிக்க வாழ்வைச்
சீயென வெறுத்தி டாது சிறப்பெனப் போற்றி வாழ்தல்
ஆயிரம் துயர்க்கும் அப்பால் அதுதரும் நிறைவால் அன்றோ!(8)

பருவங்கள் வந்து போகும் பனிவரும் வெய்யில் காயும்
அருநிலம் விண்டால் கோபம் அடைவதைக் கண்ட துண்டா!
தருநிழல் மரத்தை விட்டுத் தனித்திடல் உலகில் உண்டா!
இருவராய் இணைந்து வாழ்தல் இயற்கையின் நியதி அம்மா! (9)

அமுதெனப் பெண்மை நின்றே அகிலத்தைக் காத்து வாழ்க!
இமிழ்கடல் உலகில் என்றும் ஈடிலா வெற்றி காண்க!
தமிழென உயர்ந்து பெண்ணே! தலைதூக்கி வாழ வேண்டின்
சமுதாயக் கட்டுக்கோப்பில் சரண்புகு! தோற்றுவெல்க! (10)

நாவலரின் நல்லுரை

தூக்கணங்குருவியினால்கட்டப்படும்கூடும்,பேரெறும்புகளால் செய்யப்படும் அரக்கும், உலண்டு என்னும் பெயர் உடைய புழுவால் நூற்கப்பட்ட நூலும், கோற்புழுவால் செய்யப்பட்ட கோற்கூடும், தேனீக்களால் திரட்டப்பட்ட தேன் பொதியும் எல்லாராலும் செய்யக்கூடியது அன்று. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு காரியம் செய்ய முடியாமல் அருமையாக இருக்கும். ஆதலால் எல்லாம் செய்வோம் என்று அறிவுடையார் நினையார்.

— யாழ்ப்பாண நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலர்.

அப்பூதியடிகள்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ.

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 3—3—1985 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப் பெற்ற கட்டுரை.]

குருமணிகளின் அருள்பெறும் நாள் அது ! முதல் ஞாயிறு ! அன்பர்களில் சிலர் திருக்கோயிலிலும் சிலர் திருமடத்தில் ஆங்காங்கேயும் காணப்பட்டார்கள். அடியேன், சிற்பக்கலை வளர்த்த திருத்தருமையின் சிறப்பை எண்ணியவாறே அந்தத் தூணைப்பார்க்கிறேன்.

நுழைவாயிலை ஒட்டி இடப்புறம் இரண்டாம் தூண் ; காம தேனுவின் சிற்பம் ; பெண்முகம் ; இரண்டு கொம்புகளில் பூண், அலங்காரம், இருசெவிகளில் தோடு ; தோடுகளின் கீழே மணிபோன்ற குழை தொங்குகிறது. கழுத்தில் நவமணிகள் பொருந்திய ஆபரணங்கள். கால்களில் தண்டை. உடல் முழுதும் அலங்காரம் !

பண்டாரக்கட்டினுள் அன்பர்கள் நுழைவதைக்கண்டேன்; விரைந்துசெல்கிறேன்; ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தை வணங்கி வழிபட்டுத் திருநீறுபெற்று அமர்ந்தார்கள். அடியேனுக்கும் அந்தப்பாக்கியம் கிடைத்தது. இதை அடுத்துத் தேவாரபாரா யணம்.தொடர்ந்து திரு. T. N. அருணசலம் பிள்ளையின் திருவா சகப்பாடல் விளக்கம்.

குருமணிகள் அருளுபதேசம் தொடங்கினர்கள் ; முதலில் அவர்கள் அம்மாதச் சிறப்பினை அருள்வது வழக்கம். "பங்குனி தொடங்குகிறது. பங்குனி உத்திரநாள் சிறப்பானது; அம்பிகை இறைவனைத் திருமணம்கொண்டநாள் பங்குனி உத்திரம். திருபுவனம், பேரளம், வேளூர், மயிலாப்பூர், காஞ்சி முதலிய

தலங்களில் பங்குனி உத்திரப் பெருவிழா சிறப்பாக நடைபெறும். திருமை ஆதீனத்தில் ஆத்பரமாசாரியர் குருபூசைத் திருமுகம் எழுதுவதும் அன்றுதான்."

மாதச்சிறப்பருளிய குருநாதர் அன்றைய சிந்தனையான அப்பூதியடிகள்பற்றிச் சிலகுறிப்புக்களை முதலில்அருளினர்கள். தொடர்ந்து புராணத்தின் வாயிலாகச சமயதத்துவக்கோட்பாடு களை விளக்கினர்கள்.

'குரு, லிங்கம், சங்கமம்' இம்மூன்றும் இறையருள் பெறும் வழி. "ஒன்றவன்தானே" என்றபாடலில் "நின்றனன் மூன்றனுள்" என்று திருமூலர் இதனைக் குறிக்கின்ருர்.

'ஆசாரியன் திருவருளால் நலம்பல பெறலாம்' என்பதை இப்புராணம் உணர்த்துகிறது; பெருமிழலைக்குறும்பர் சுந்தரரைப்பாராமலே - அவரைத்தியானித்து அருள்பெற்ருர்; திருக்கைலையில் சென்று அவரைக்கண்டார்; அப்பூதியடிகளும் முதலில் நாவுக்கரசரைக் காணமலே அவரிடம் பக்திபூண்டவர். கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் போல ஒருவரை ஒருவர் பாராமலே நட்புக்கொண்டவர் என்று ஒப்பாய்வு செய்தருளினர்கள்.

திருநாவுக்கரசர்பற்றிக் கேள்விப்பட்டு அவரிடம் பத்திமை பூண்டார் அப்பூதியார். அப்பூதியாரைச் சேக்கிழார்,

" தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னருக் கன்பர்
ஈண்டிய புகழின் பாலார் எல்லையில் தவத்தின் மிக்கார்
ஆண்டசீர் அரசின் பாதம் அடைந்தவர் அறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்த அன் பினராய் உள்ளார்."

என அறிமுகப்படுத்துகிருர். குருமணிகள் இப்பாடலின் ஒவ்வொரு தொடருக்கும் மிகச் சிறப்பானமுறையில் விளக்கம் அளித்தார்கள்.

'தாண்டவம் புரிய வல்ல தம்பிரான்' என்ற தொடர் 'இறைவன் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் ஆடுபவன், உயிர்களுக்குத் தலைவன்' என்னும் பொருளுடையது.

இறைவனின் தாண்டவதத்துவத்தை,

" தோற்றம் துடியதனில், தோயும் திதியமைப்பில்;
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி,
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

என்னும் உண்மை விளக்கப் பாடலைக்கொண்டு சைவசித்தாந்தநெறியோடு விளக்கி உபதேசித்தார்கள்.

'தம்பிரான்' என்ற சொல் தம் + பிரான் எனப்பிரியும். தம் – உயிர்கள்: பிரான் – தலைவன், உயிர்களுக்குத்தலைவன் என்பது பொருள். 'தன்' என்பது இறைவனைக் குறிக்கும்சொல். உலகியலில் 'தற்செயலாக நடந்தது' என்று 'தற்செயல்' என்ற சொல்லை ஆள்வர்! தற்செயல் என்பது இறைவன் செயல் என்னும் பொருளை உடையது என விளக்கிச் சிவஞானபோத அவையடக்கச் செய்யுளில்,

" தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார் "

என்ற தொடரை மேற்கோளாக அருளினார்கள்.

பாடலின் ஒவ்வொரு தொடருக்கும் விளக்கம் அருளியமை அவர்களின் சாத்திர தோத்திரப் புலமையை விளக்குவதாய் அமைந்திருந்தது; அன்பர்கட்குப் பெரும்பயன் விளைத்தது.

சுந்தரர் அப்பூதியடிகளை 'ஒருநம்பி அப்பூதி' என்றார். நம்பி– நலம் உடையவன். நம்பன் என்ற சொல்லடியாகப் பிறந்தது. 'நம்பு' என்பது வேர்ச்சொல். 'நம்பும் மேவும்நசையாகும்மே' என்பர் தொல்காப்பியர். நம்பன் என்னும் சொல் உயிர்கள் மாட்டு உதவும் விருப்பம் உடையவன் என்னும் பொருள் தோன்ற நிற்பது என 'ஒருநம்பி' என்னும் தொடர்க்கு அரிய விளக்கம் செய்தார்கள்.

திருநாவுக்கரசர் திருப்பழனம் வழிபட்டார்; திங்களூர் வழிச்செல்கின்றார். அது 'அளவில் சனம் செலவு ஒழியாதவழி' ஆதலால் அங்கே அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் பெயரால் தண்ணீர்ப்பந்தல்வைத்திருந்தார். அப்பூதியடிகள் தாம் அமைத்த திருமடம், சாலை, குளம் காமுதலிய அறங்களுக்கும் தம் இல்லத்தில் அளவுகருவிகட்கும் மக்களுக்கும் ஆநிரைகள், எருமைகள் முதலாயினவற்றுக்கும் 'திருநாவுக்கரசு' எனும் திருப்பெயரை வைத்திருந்தவர் ஆயிற்றே! தண்ணீர்ப்பந்தலில் திருநாவுக்கரசு தண்ணீர்ப்பந்தல் என எழுதியிருப்பதைக் கண்டார். 'அங்கு நின்றாரை' இப்பந்தல் இப்பெயரிட்டு இங்கு அமைத்தார் யார்? என வினவினார். செய்தியறிந்து அப்பூதியார் இல்லம் நோக்கிச் சென்றார். அப்பூதியார் திருநாவுக்கரசரே வந்துள்ளார் என அறியாராயினர்; வந்திருப்பவர் சிவனடியாராதலின் அவரை உபசரித்தல் வேண்டும் எனக்கருதி உபசரித்தார். 'இம்மனைக்குவந்த காரணம்யாது' என வினவினார். நாவுக்கரசர் 'சிவனடியார்கட்கு

நீர் வைத்த தண்ணீர்ப்பந்தலில் நும்பெயர் எழுதாமல் வேறு ஒருபேர் எழுதவேண்டிய காரணம் என்ன?' எனக் கேட்டார். அப்பூதியார் சிந்தையழிந்தார்.

"நீர் நன்று அருளிச் செய்திலீர்; அமணர் செய்த சூழ்ச்சிகளைத் தொண்டின் உறைப்பால் வென்று, இம்மையிலும் சிவனருளால் உய்யலாம் என நெறிகாட்டிய திருநாவுக்கரசர் பெயரா வேறு ஒருபேர்? கடலில் கல்லில் பிணைத்துப்போட்டபோது அதனையே தெப்பமாகக் கொண்டு வென்றவர் பெருமையை அனைவரும் அறிவர்; மங்கல வேடத்துடன் நீர் இவ்வகை மொழிந்தீரே! நீர் யார்? எங்குறைவீர்?" எனக் கேட்டார்; பிற துறையினின்று ஏற இறைவனால் சூலைநோய்தந்து ஆட் கொள்ளப் பெற்ற தெருளுமுணர்வில்லாத சிறுமையேன்" எனத் தம்மைப்பற்றித் திருநாவுக்கரசர் கூறினார். அப்பூதியடிகள், கண்ணில் ஆனந்தக் கண்ணீர் பெருகிட ஆனந்தக் கூத்தாடினார். தம் இல்லத்தில் திருவமுது செய்ய வேண்டுமென வேண்டினார். வணங்கினார். வழிபட்டார்,

மனைவியார் திருவமுது சமைத்தார்; மூத்ததிருநாவுக்கரசு தலைவாழைக் குருத்தரியச் சென்றார். வாழையின் குருத்து அரியும்போது பாம்பு தீண்டிற்று. வேகமாக ஓடிவந்தார். வாழைக்குருத்தைத்தாயிடம் கொடுத்தார். யாதொன்றும் கூறுது மயங்கிவீழ்ந்தார். ஏழுவேகமும் ஏறிற்று. பெற்றோர் நிலைகண்டனர். விடம் தீண்டி இறந்தமை உணர்ந்தனர். பாயினுள் மூடிப் புறக்கடையின் ஒருபக்கம் மறைத்து வைத்தனர். 'இது நாவுக்கரசருக்குத் தெரியாவண்ணம் அமுது செய்விப்போம்' எனப் பெருவிருப்பினோடு முடிவு செய்தனர்.

நாவுக்கரசரைத் திருவமுது செய்யவேண்டினர். ஆசனத் தமர்ந்த நாவுக்கரசர் திருநீறு அளித்தார். பிள்ளைகட்குத் திருநீறு அளிக்கும்போது 'இவர்க்கு மூத்த சேயைத் திருநீறு சாத்தும் பொருட்டுக் காட்டுக' என்றார். அப்பூதியடிகள் 'இப்போது இங்கு அவன் உதவான்' என்றார். நாவுக்கரசர் திருவுள்ளத்தில் தடுமாற்றம் தோன்றிற்று.

குருமணிகள் இப்பகுதியை விளக்கும்போது 'சலனப்பட வேண்டிய அப்பூதியடிகள் சலனப்படவில்லை; சலனப்பட வேண்டாதவர் சலனப்பட்டார்' எனக்குறித்துச் சிவனடியார் திறம்பற்றி விளக்கமருளினார்கள்.

உரைகேட்ட நாவுக்கரசர் 'சவத்தினைத் திருக்கோயில்முன் கொணர்வித்து' 'ஒன்றுகொலாம்' எனும் பதிகம்பாடினார். பாம்பின் விடம் நீங்கி மூத்த திருநாவுக்கரசு உயிர் பெற்றெழுந்தான். நாவுக்கரசர் திருநீறு அளித்தார்.

அப்பூதியடிகளும் அவர் மனைவியாரும் 'அன்பர் திருவமுது செய்யச் சிறிது இடையூறு செய்தனன்' எனவருந்தினர், திரு நாவுக்கரசர் அப்பூதியார் மனைக்கு எழுந்தருளித் திருவமுது செய்தார். சிலகாலம் தங்கியிருந்தார். திருநாவுக்கரசர் அப்பூதி யடிகள் தொண்டினைச் சிறப்பித்துத் திருப்பழனப் பதிகப்பாட லில் குறித்தருளினர்.

நரஸ்துதியே செய்யாத நாவுக்கரசர் 'வஞ்சித்தென்' எனத் தொடங்கும் பாடலில் " அஞ்சிப்பேய்க் கலிமெலிய அழலோம் பும் அப்பூதி குஞ்சிப்பூவாய் மலரும் சேவடி " எனப் பாடியிருப் பதைக் குறிப்பிட்டார்கள். மனிதரைப் பாடாத திருஞான சம்பந்தர் மானியாரைப் பற்றிப்பாடியிருத்தல் போன்றது இது என ஒப்பிட்டு முறையில் தெளிவு படுத்தினர்கள்.

கலி அஞ்சிப்போய் மெலிதற்காக அழலோம்பல் நிகழ்ந்தது என்பதைப் பல சான்றுகள் காட்டி நிறுவினர்கள்.

சேக்கிழார் வாக்குத் தெய்வத் திருவாக்கு என்பதை, 'எங் குறைவீர்' எனும் தொடர் கொண்டு விளக்கிய போது மனம் நெகிழ்ந்தது. நாவுக்கரசரை அப்பூதி, 'எங்குறைவீர்?' நீர்தான் யார்? என வினவினர். அத்தொடர் எம்+குறைவு+ஈர்=எமது குறையை நீக்கவந்தவர் என்னும் பொருளும்பயந்தது என விளக் கினர்கள். முத்ததிருநாவுக்கரசைப்பாயினுள் மறைத்துவைத்தார் அப்பூதி. நாவுக்கரசர், பின்னர் 'மெய்விரித்துரையும்' என்றார், இதன் பொருள் உண்மையை விரிவாகச்சொல்லுங்கள் என்பதா னுலும் இணைத்துப்பார்க்கும் பொழுது பாயினுள் உள்ள உடலை (மெய்யை) விரித்து (பாயைவிரித்து)க் கூறுங்கள் என அருளியது போலுள்ளது என நயம் உரைத்தருளி இலக்கியச் சுவையூட்டி மகிழ்வித்தார்கள். வாழையிலையிடும் போது அரிந்தபக்கம் வலப்புறம் இருக்குமாறு இடவேண்டும் என்னும் குறிப்பு இப் புராணத்தில் இருத்தலைச் சுட்டிக்காட்டினர்கள்.

குருமணிகளின் அருளுரைகள் நலம்பலமிக்கன. இங்கு எடுத்துரைக்கப் பெற்றன மிகச்சிலவே. தலவரலாற்று ஆய்வு கள், வேத, உபநிடதக் கருத்துக்கள், புராண இலக்கியச்சிந்தனை கள் - இப்படிப்பல.

மங்கல வாழ்த்துடன் அருளுபதேசம் நிறைந்தது. இனிய கனிச்சாறு அந்த உச்சிப்போதுக்கு இதமாய் இருந்தது. மகிழ் வோடு பருகி நிறைவோடு இல்லம் திரும்பினேம்.

அப்பூதி திறம் உரைத்த அருட்குருவின் தாள்போற்றி!

மாதவச்சிவஞானமுனிவர்
இருநூறுவதாண்டு நினைவு

சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பு

தருமை ஆதீனம்
அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்

தருமபுரம், மயிலாடுதுறை.

தருமை ஆதீனம் அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சென்னை, திருநெல்வேலி முதலிய இடங்களில் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த மாதவச் சிவஞான முனிவரின் இருநூறுவது ஆண்டு நினைவாகக் கோடைக்காலச் சைவசித்தாந்தப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

இடம் :

1. ஸ்ரீ குருஞானசம்பந்தர் இறைபணி மன்றம்,
   பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர்.
2. ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடம்,
   397, வடக்குமாசிவீதி, மதுரை.
3. மௌனமடம், மலைக்கோட்டை.
   திருச்சிராப்பள்ளி.
4. தருமையாதீன சமயப் பிரசார நிலையம்,
   உஸ்மான்ரோடு, தியாகராயநகர், சென்னை.
5. தருமையாதீனத் திருமடம், திருநெல்வேலி.

தேதிகள் :–

ஏப்ரல்	26	முதல்	29	வரை	–	கோயம்புத்தூர்.
மே	3	முதல்	9	வரை	–	மதுரை.
மே	12	முதல்	18	வரை	–	திருச்சிராப்பள்ளி.
மே	22	முதல்	28	வரை	–	சென்னை.
ஜூன்	14	முதல்	20	வரை	–	திருநெல்வேலி.

பாடத்திட்டங்கள் :-

"உண்மை விளக்கம்"	-	கோயம்புத்தூர்
"சிவஞானபோதம்"	-	சென்னை.
"திருவருட்பயன்"	-	மதுரை.
"சிவப்பிரகாசம்"	-	திருச்சிராப்பள்ளி.
"சிவஞானசித்தியார்"	-	திருநெல்வேலி.

சொற்பொழிவுத் தலைப்புகள் :-

1 சைவத்தின் தொன்மை. 2 வரலாற்றில் சைவம் 3. ஆகமங்களும் சைவக்கோட்பாடுகளும் 4. தேவாரத்திருமுறைகள். 5. மெய்கண்ட சாத்திரங்கள். 6. பண்டார சாத்திரங்கள். 7. வாழ்வில் சைவம். 8. சைவக்கோயில் அமைப்பு, வழிபாட்டு முறை. 9. சைவ அடியார்கள். 10. சைவப்படிமங்கள்.

பாடம் நடைபெறும் நேரம் :-

காலை 8 மணிமுதல் 9-30 மணிவரை - திருமுறைவிளக்கங்கள், பாடல் பயிற்சி.

மாலை 4 மணிமுதல் 5-30 மணிவரை - மெய்கண்ட சாத்திரங்கள்.

„ 6 மணிமுதல் 7-30 மணிவரை - பொதுச் சொற்பொழிவுகள்.

விபூதி அவசியம் தரிக்கவேண்டிய காலங்கள்

சந்தியாகாலம் மூன்றினும், சூரியோதயத்தினும், சூரிய அஸ்தமனத்தினும், ஸ்நானம் செய்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், போசனத்துக்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும், மலசலமோசனம் செய்துசௌசம்பண்ணி ஆசமித்தபின்னும், தீட்சை இல்லாதவர் தீண்டியபோதும்; பூனை, கொக்கு, எலி முதலியன தீண்டியபோதும், விபூதி அவசியமாகத் தரித்தல்வேண்டும். — சைவ வினாவிடை 2-ம் பாகம்.

ஆடாதோடை

[வைத்திய இரத்தினம் திரு. க. ச. முருகேச முதலியார் அவர்கள், சென்னை இறையாட்சி இந்திய மருத்துவக் கலாசாலை, சித்தமருத்துவத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர்கள். அவரதுநூலான 'பொருட்பண்பு நூல் பயிர்வகுப்பு – குணபாடம்' (*Materia Madica*) முதற்பாகத்தி லிருந்து 'ஆடாதோடை' பற்றிய இக்கட்டுரை தொகுக்கப்பட்டது. இரண்டாம் பதிப்பு 1952. தொகுத்தவர் :- "செந்தில் குமரன்".]

ஆடாதோடை தென்னிந்தியாவிலும் வங்காளதேசம் முழுவதிலும் ஏராளமாகப் பயிராகிறது. இதை ஆங்கிலத்தில் 'மலபார் நட்' (Malabar-nut) என்றும் வடமொழியில் 'வைத்திய மாத்ரு விருட்சம்' என்றும் கூறுவர். ஆடாதோடை இலை மாவிலை நுணாஇலைகளைப் போல் 4 முதல் 9 அங்குலம் நீளமும், 2 முதல் 3 அங்குல அகலமாகவும் இருக்கும். இச்செடி 4 முதல் 10 அடி உயரம் வளரக் கூடியதாகும். இதன் பொதுவான செய்கை இசிவகற்றி (Antispasmodic), கோழையகற்றி (Fxpectorant) கிருமிநாசனி (Germicide), சிறுநீர்ப்பெருக்கி (Liuretic) என வைத்சிய நூல்வல்லார் வருணிப்பது உண்டு. இதன் இலை, பூ, பட்டை, வேர் முதலியன மருத்துவ மகிமை உள்ளனவாகும்.

ஆடாதோடையின் பொதுப் பயனை ஒரு பழைய ஏட்டுப் பாடல் அழகுபட அளந்து தெரிவிக்கிறது.

ஆடாதோ டைக்கிரத்த பித்தமறும்காசம்
　　ஆனந்த வாயுவுடன் மேலிளைப்பு மேகம்
சூடாகும் தாபசுரம் பித்தகப வாத
　　சுரரோகம் சந்நிபாதம் சூலை குட்டம்
ஓடாவோ வாந்திவிக்கல் மூல ரோகம்
　　ஒளிதோடம் உட்கனலும் ஒழியும் தானே
வாடாது மனக்கிளர்ச்சி யாகும் இதன் பெருமை
　　வகுத் துரைத்தார் முன்னோர்கள் வாழ்ந்திடயா வருமே

இலை: இலையின்ரசம் 10 முதல் 20 துளிகள் வரை எடுத்து, தேனுடன் கலந்து கொடுக்க – சிறப்பாகக்குருதி அழல், இருமல், இளைப்புநோய், சுரம், காமாலை தீரும். அல்லது இலையைமட்டும் குடிநீர் செய்து, அதில் தேன்சேர்த்துக் கொடுத்து மேற்படி நோய்களை எளிதில் தீர்க்கலாம். இரண்டு பிடி கொழுமையான இலைகளைப் பொடிப்பொடியாகக் கத்தரித்து, ஒரு புதிய மண்சட்டியிலிட்டு, தேன் சிறிது கூட்டி எரிக்க, ஒருவிதசுகமான நன்மணம் வீசும். அப்போது, அதிமதுரம் வராகனெடை $\frac{1}{4}$. திப்பிலி வராகனெடை $\frac{1}{4}$, தாளிசபத்திரிவராகனெடை $\frac{1}{4}$ இவைகளை ஒன்றிரண்டாக நசுக்கிச்சேர்த்து, அரைப்படி சுத்தநீர்விட்டு அரைக்காற்படியாகக் குறுக்கி, வடிகட்டி, காலை மாலை இருவேளையும் கொடுத்துவரக் கோழைக்கட்டு அற்றுநீங்கும். சளி வெளிப்பட்டுக் கழியும். இருமல், இரைப்பு, சுரம்போன்றவைகள் அகன்று ஒழியும். ஒரு பங்கு இலைக்கு நீர் சேர்த்து, எட்டில் ஒன்றாகக் குறுக்கி வடிகட்டிய குடி நீரைத்துணியில் தோய்த்து ஒற்றடமிட, வீக்கம், சூலை, கீல்பிடிப்பு முதலியனதணிந்து அகன்றொழியும். இலையின் தனிரசம், இரத்தக் கழிச்சல், சீதமும் இரத்தமும் கலந்துண்டாகும் கழிச்சல் முதலியநோய்கட்கு நல்லபயன் தரும். இலையை உலர்த்திச் சுருட்டாகச் சுருட்டிப்புகைக்க, இரைப்பு நோய்இல்லா தொழியும்.

இதன் இலையையும் வேரையும் ஒரெடை எடுத்து, அதற்குத் தக்கப்படி மிளகும் கூட்டி, ஊறல் குடிநீர் செய்து கொடுக்க, இரைப்பு, உப்பிசம், ஈளை, இருமல், சுரம் தணிந்து மறையும்.

பூ: பூவை வதக்கி இருகண்கள்மீதும் வைத்துக் கட்ட, கண்களில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து நல்ல குணம் உண்டாக்கும்.

பட்டை: இதனைக் குடிநீர் செய்தாகிலும், பொடிசெய்தாகிலும், சுரம், இருமல், இளைப்பு ஆகிய நோய்களுக்குக் கொடுத்துக் குணம் பெறலாம்.

வேர்: இதன் வேரினால் இருமல், அழல் மந்தம், அழல் மிகுதி (அவேத பித்தம்), கடின முச்சு, கழுத்துவலி முதலியன தீரும்.

" காசமொடு மந்தம் கதித்தபித் தங்கொடும்சு
வாசம் கழுத்து வலிமுதல்நோய் — கூசியே
ஓடாது இராதிங்கு ஒருநாளும் ஒண்டொடியே
ஆடாதோ டைத்தூருக்கு அஞ்சு."

(அகத்தியர் குணபாடம்)

ஆடாதோடை வேரையும் கண்டங்கத்திரி வேரையும் குடிநீரிட்டு, அதில் திப்பிலிப்பொடி சேர்த்துக்கொடுக்க இருமல் நீங்கும். ஆடாதோடை, திராட்சை, கடுக்காய் இவற்றின் குடிநீரில், தேனும் சருக்கரையும் கூட்டி உட்கொள்ள, கொடுமையான குருதி அழல், இரைப்பு, இருமல் உடனே தீர்ந்து அகலும். பாடகர்களுக்கு ஆடாதோடை அருமருந்தாகும். "ஆடாதோடைஇலை ஆறுவேளை சாப்பிட்டால் பாடாத பாட்டும் பாடலாம்" என்பது பழமொழி.

"ஆடா தோடையின் குணத்தை
அடைவுடன உரைக்கக்கேளும்
பாடாத நாவும் பாடும்"

என்னும் அடிகள் ஆடாதோடையின் ஏற்றத்தைக் கூறும் ஏட்டுப் பாடல் ஆகும்.

பஞ்சாட்சரத்தின் பயன்

ஸ்ரீபஞ்சாட்சரத்தின் பொருளை அறிந்து, சிவபெருமான் ஆண்டவன்; தான் அடிமை என்னும் முறைமையை மனத்தகத்தே வழுவாமல் இருத்தி, அதனை விதிப்படி மெய்யன்போடு செபித்துக்கொண்டுவரின், விறகினிடத்தே அக்கினி பிரகாசித்தாற்போல, ஆன்மாவினிடத்தே சிவபெருமான், பிரகாசித்து மும்மலங்களும் நீங்கும்படி ஞானானந்தத்தைப் பிரசாதித்து அருளுவர்.

இயமமும் நியமமும்

கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர் மனைவியரையும் பொதுமகளிரையும் விரும்பாமை ஆகிய ஆண்டகைமை, இரக்கம், வஞ்சனையில்லாமை, பொறையுடைமை, மனம் கலங்காமை, அற்பாகாரம், சுசியுடைமை என்னும் பத்தும் இயமமாகும்.

தவம், மனமுவந்திருத்தல், கடவுள் உண்டு என்னும் விசுவாசம், பாவத்துக்குப் பயந்து தேடியபொருளைச் சற்பாத்திரமாக உள்ளவருக்குக் கொடுத்தல், தன்னின் முத்தோரை வழிபடுதல், உயிர்க்குறுதி பயக்கும் உண்மைநூல்களைக்கேட்டல்; குலம், செல்வம், அதிகாரம் முதலியவைகளினாலே கர்வம் இன்றி அடங்கி ஒழுகுதல், தக்கனவும் தகாதனவும் பகுத்தறிதல், செபம், விரதம் என்னும் பத்தும் நியமமாகும்.

— சைவ வினா விடை. (2-ம் பாகம்)

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவாரப்பாடல்பெற்ற தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. 5—3—85 செவ்வாய்க் கிழமையன்று திருவடுகூர் அருள்மிகு வடுகநாதர் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு நிகழ்வுற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும் திருப்பதிகப்பாராயணமும் நிகழ்த்தப்பெற்றன. "திருவடுகூர்த் திருப்பதிகம்" என்ற நூல் வெளியீடப் பெற்றது. தருமையாதீனத் தமிழ்ப்புலவர் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., உரையாற்றினர். அன்பர் பலர் வழிபாட்டிற் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கிலமாத முதல் ஞாயிறன்றும் காலை சரியாகப் பத்துமணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வணங்கி வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக் கூட்டம் 7—4—85 அன்று 46 ஆம் அருளுபதேசம் நிகழ்வுற்றது.

முதலில் வழிபாடும் பிரார்த்தனையும் நிகழ்ந்தன. அடுத்து அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர். திரு. ஏ வி. ஜயசந்திரன், பரபக்கத் தொடர்புடைய ஆய்வுநூல் ஒன்று பற்றிக் குறிப்பிட்டு அதில் அடங்கியுள்ள செய்திகள் குறித்து உரையாற்றினர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாகத் திருநீலநக்கர் புராணத்தைத் தத்துவச்செறிவோடு விளக்கிஉபதேசித்தார்கள். "அன்புநெறி, அறிவுநெறி"என்பன இறையருள் பெறும் வழிகள்; இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தன. தோத்திரம், சாத்திரம் என்பவை முறையே அன்பு நெறிகளை உணர்த்துவன. அறிவும் அன்பும் சிவமும் சக்தியும் போல்வன—இந்நெறியின் அடிப்படையை விளக்குவதே திருநீலநக்கர்புராணம் எனஉபதேசித்தமைபுதியகண்ணோட்டச்

சிந்தனையாக அமைந்தது. "தட்சிணாக்கினி, காருகபத்தியம் ஆகவனீயம் என்னும் முத்தீயுடன் கற்புத்தீ எனும் ஒன்றையும் கூட்டி நான்குதீயாக வளர்த்தமை" பற்றித் திருநீலநக்கர் புராணத்தில் குறிப்பிடுதலை விளக்கித் 'தீ ஓம்பல்' பற்றிய பல அரிய கருத்துக்களை அன்பர்கள் மனங்கொள எளிமைப்படுத்தி உபதேசித்தார்கள். திருமுறைகள், புராணங்கள், இலக்கியங்களை மேற்கோள் காட்டி ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் உபதேசித்தமை தத்துச் செறிவோடு சிந்தனைக்கு விருந்தாய் அமைந்திருந்தது.

திருமயிலாடுதுறை அன்பர்களும் பக்தர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். அடுத்து 47 ஆம் அருளுபதேசம் 5—5—85 அன்று நிகழ உள்ளது. அன்பர்கள் கலந்து கொண்டு பயன்பெறுக.

வசந்த நவராத்திரிவிழா

தருமையாதீனம்ஸ்ரீ ஆனந்தபரவசர்பூங்காவில்திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வனதுர்க்கா தேவிக்கு வசந்த நவராத்திரிவிழா 22—3—85 வெள்ளிக்கிழமை அன்று தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது. இந்நாட்களில் உலகநலன் கருதி ஸ்ரீ வனதுர்க்கா தேவிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நவசக்தி அர்ச்சனைமூலம் லட்சார்ச்சனையும் சப்தசதி மகாமந்திர அர்ச்சனையும் நிகழ்த்தப்பெற்றன. 30—3—85 சனிக்கிழமையன்று சப்தசதி பூஜா ஹோமமும் இரவு லட்சார்ச்சனைப் பூர்த்தியும் நடைபெற்றன. தேவியின் சந்நிதியில் தேவீமகாத்மிய பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம் முதலியன நடைபெற்றன. நாள்தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள். பக்தர் பலர் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

பங்குனித் திங்கள் பெருவிழா

வேளூரில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் 26—3—85 செவ்வாய்க்கிழமை தொடங்கிப் பத்து நாட்கள் பங்குனி உத்திரப் பெருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், சகோபுரக்காட்சி, திருத்தேர் விழா, தீர்த்தவிழா ஆகியவை சிறப்புத் திருநாட்களாகக் கொண்டாடப் பெற்றன. 29—3—85 வெள்ளிக்கிழமை அன்று திருமுறை விழாவும் தேவாரவகுப்பு ஆண்டுவிழாவும் சிறப்பாக

நடைபெற்றன. தக்க புலவர்களைக் கொண்டு சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கப் பெற்றன. அன்பர்பலர் சுவாமி தரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

திருபுவனத்தில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 26—3—85 செவ்வாய்க்கிழமை முதல் பத்து நாட்கள் பங்குனிஉத்திரப் பெருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், தன்னைத்தான் அருச்சித்தல், சகோபுரக்காட்சி, திருக்கல்யாண விழா, திருத்தேர் விழா ஆகியவை சிறப்புத் திருநாட்களாகக் கொண்டாடப் பெற்றன. தக்க புலவர்களைக் கொண்டு சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கப் பெற்றன. 29—3—85 வெள்ளிக்கிழமை அன்று திருமுறை விழாவும் தேவாரவகுப்பு ஆண்டுவிழாவும் சிறப்பாக நடைபெற்றன.

பேரளத்தில் :

தருமையாதீனத்திற்குச்சொந்தமான பேரளம் ஸ்ரீசுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் உருத்திரபாதத் தீர்த்தத் திருநாள் 4—4—85 வியாழனன்று நடைபெற்றது. அன்று காலை பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அக்னிபுஷ்கரணி தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளலும் இரவு திருவீதியுலாவும் சமயச்சொற்பொழிவும் நிகழ்ந்தன. அன்பர்கள் சுவாமி தரிசனம் செய்தும் சொற்பொழிவு கேட்டும் பயனுற்றனர்.

அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் மூன்றும் கருத்தரங்கம்

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பெருங்கருணைத் திறத்தால் உருவாகிக் குருமணிகளின் அருளாசியுடன் வளர்ச்சி பெற்றுவரும் அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் மூன்றும் கருத்தரங்கம் 23, 24—3—1985 ஆகிய இருதினங்களிலும் தருமை ஆதீனப் பல்கலைக்கல்லூரிவழிபாட்டுமன்றத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. சைவசித்தாந்த சாத்திரம், பண்டார சாத்திரங்களில் 'பாசக்(தளைக்) கொள்கை' பாங்குறப் பகரப்பெற்றுள்ளமை குறித்து ஆய்வாளர்கள் கட்டுரைகள் வாசித்தனர்.

23—3—85 சனிக்கிழமை காலை திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர், கயிலைமாமுனிவர். ஸ்ரீமத் ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் கருத்தரங்கைத் தொடங்கிவைத்து ஆசிவழங்கினர்கள்.

23--3—85 காலை, கருத்தரங்கின் முதல் அமர்வுக்கு டாக்டர். திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களும் பிற்பகல் இரண்டாம் அமர்வுக்கு வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும் 24—3—85 காலை மூன்ரும் அமர்வுக்கு டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் அவர்களும் பிற்பகல் நான்காம் அமர்வுக்குப் பேராசிரியர் திரு. மு. சுந்தரேசம்பிள்ளை அவர்களும் தலைமையேற்றனர்.

மெய்கண்டார், சீகாழி தத்துவநாதர், சிவஞானதேசிகர், மறைஞானசம்பந்தர், திருவியலூர் உய்யவந்ததேவர் அருணந்தி சிவாசாரியர், உமாபதிசிவம், தத்துவபிரகாசர், கமலை ஞானபிரகாசர், ஸ்ரீ குருஞானசம்பந்தர், மனவாசகம் கடந்தார், குமரகுருபரர், திருக்கடவூர் உய்யவந்த தேவர் ஆகியோர் அருளிய நூல்களில் பாசக்கொள்கை பற்றிய கருத்துக்கள் குறித்து ஆய்வுக்கட்டுரைகள் படிக்கப்பெற்றன; கலந்துரையாடல் நிகழ்ந்தது.

ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் திரு. ஏ. வி. ஜயச்சந்திரன் ஒவ்வோர் அமர்வின் போதும் வரவேற்புரை நன்றியுரை கூறினர். கருத்தரங்கம் ஆய்வாளர்கட்குப் பயனுடையதாய் அமைந்திருந்தது.

நாயன்மார் குருபூஜைத் திருநாட்கள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில்பங்குனித்திங்கள்சதயநாளில் (19—3—85) தண்டியடிகள் நாயனர் ரோகிணி நாளில் (23—3—85) நேசநாயனர், திருவாதிரை நாளில் (29—3—85) கணநாத நாயனர் பூசநாளில் (31—3—85) முனையடுவார் நாயனர், சுவாதி நாளில் (6—4—85) காரைக்காலம்மையார் குருபூஜைத் திருநாட்கள் சிறப்பாக நடைப்பெற்றன. ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு அர்ச்சனை வழிபாடுகள் நிகழ்த்தப் பெற்றன. வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ, புராணம் வாசித்து வரலாறு கூறினர். ஆதீன வேதாகமபாடசாலை, தேவாரப்படசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் அன்பர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

விஞ்ஞானம் நிரூபிக்கிறது!

திரு. என். ஆர். ஜெயசந்திரன்

விஞ்ஞானத்தின் உதவியால் நாம் இன்று வியத்தகுசாதனை களைப் புரிந்து வருகிறோம். நம்முன்னோர்கள் கனவிலும் காணாத காட்சிகளை நாம் கண்களால் காணவும், கண்டு வந்தவர்கள் அளித்த விளக்கங்களையும், சான்றுகளையும் கூறவும் கேட்டு மகிழ்கின்றோம்.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க விண் வெளிக்கலம் அப்போலோ 13 விண்வெளியில் பயணம் செய்த பொழுது அதில் கோளாறு ஏற்பட்டது. அதில் பயணம் செய்த வர்கள் 'உயிருடன் பூமிக்குத் திரும்புவார்களா?' என்று அச்ச நிலை தோன்றியது. விஞ்ஞானிகள் நம்பிக்கையை இழந்து விட்டார்கள்.

அப்பொழுது அமெரிக்க அதிபராக இருந்த ஜான்சன், "அப்போலோ 13–இன் ஆயுள் நம்கையில் இல்லை. இறைவன் கையில் தான் இருக்கிறது. அனைத்து மாதா கோயில்களிலும் வழிபாடுகள் நடைபெறட்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

விஞ்ஞானிகள் ஒரு பக்கம் முயற்சியில் ஈடுபட்டார்கள். மறுபக்கம் மக்கள் இடைவிடாது, தொடர்ந்து பிரார்த்தனை செய்தார்கள். அப்போலோ 13 பத்திரமாகத் தரை இறங்கியது. விண்வெளி வீரர்கள் உயிர் பிழைத்தார்கள்.

இங்கிலாந்திலுள்ள கார்டிஃப் பல்கலைக் கழகக்கல்லூரியில் இரண்டு விஞ்ஞானிகள் பணிபுரிகிறார்கள். ஃபிரெட் ஹோயில், சந்திர விக்ரம்சிங்கே என்பது அவர்கள் பெயர்கள். இந்த இரு விஞ்ஞானிகளும் விண்வெளி ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள வர்கள்.

இவர்கள் இருவரும் சமீபகாலம்வரை தீவிர நாத்திகர்களாக இருந்து வந்தார்கள். நாத்திகத்தைப் பரப்ப ஒரு குழுவைக் கூட ஏற்படுத்திச் செயல்பட்டு வந்தார்கள்.

ஆனால் இப்பொழுது அந்தக் குழுவைக் கலைத்துவிட்டு, நாத்திகத்தை விட்டு, ஆத்திகத்தை ஆதரித்து வருகிறார்கள்.

"இறைவன் இருக்கிறான். அவன் இன்றேல் ஒன்றும் இல்லை" என்று பெருமையுடன் கூறுகிறார்கள்.

அவர்கள் கூறும் காரணங்கள் :—

1. இப்பரந்த உலகில் நாம் வாழும் பூமியைப்போல், சிறியனவாயும், பெரியனவாயும், பல அளவுள்ள கோள்களும், நட்சத்திரங்களும் ஏராளமான எண்ணிக்கையில் உள்ளன.

அவைகள் பல ஆயிரம் ஆண்டுகளாகக் குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பாதைகளில் சென்று கொண்டிருக்கின்றன. அவைகளின் இயக்கங்களில் இதுநாள்வரை எவ்விதக்கோளாறும் ஏற்படவில்லை. அவைகளின் பயணப் பாதைகளிலும் தவறுகள் ஏற்படவில்லை.

அவைகளில் ஒன்றில் கோளாறுஏற்பட்டு ஒன்றோடொன்று மோதியிருந்தாலும் இவ்வுலகம் அழிந்து பிரளயநாசம் ஏற்பட்டிருக்கும். (அப்படி ஆகாமல் காத்து வருவது எந்த சக்தி?)

2. நாம் வாழும் பூமி மணிக்கு ஆயிரம் மைல் வேகத்தில் சுற்றுகிறது. அதனுடையவேகம் தற்பொழுது உள்ளதைவிடப் பாதியாகக் குறையுமானால் இரவு பகல் அதிகமாகி சூரியனின் வெப்பம் அதிகரித்து மக்களையும் இதர உயிர்களையும் அழித்து விடும். அதுபோலவே வேகம் பாதிமடங்கு அதிகரித்தாலும் சிக்கல் ஏற்பட்டுக் குழப்பம் ஏற்பட்டு பூமி அழிந்துவிடும். (அப்படி ஆகாமல் காப்பது எது?)

3. நமக்கு அளவில்லாத ஆற்றலைத் தந்து நம்மை வாழ வைக்கும் சூரியனின் வெப்பம் பன்னிரண்டாயிரம் டிகிரியாகும். அதனுடைய வெப்பம் இன்னும் ஒரு ஆயிரம் டிகிரி அதிகமானல் நாம் வெப்பத்தினல் கருகிவிடுவோம். அதுபோலவே வெப்பம் குறைந்தாலும் கடுங்குளிரால் அழிந்துவிடுவோம். (அப்படி ஆகாமல் கட்டுப்படுத்தி வைத்திருப்பது எது?)

4. நாம் வாழும் பூமி 23 டிகிரி சாய்வில் சுற்றிக்கொண்டிருக்கிறது. அப்படி 23 டிகிரி சாய்வில் பூமி சுற்ருவிட்டால் நமக்குப் பருவகாலங்கள் ஏற்படாது. எப்பொழுதும் எந்தக்காலத்திலும் ஒரே பருவம் போல இருந்து உயிர்களின் தோற்றமும், வளர்ச்சியும் இருக்காது. (இதை நிர்ணயித்து வருவது எது?)

5. சந்திரன் நாம் வாழும் பூமியிலிருந்து 2,40,000 மைல் தொலைவில் உள்ளது. அது இப்பொழுது இருப்பதைவிட ஐயாயிரம் மைல்கள் அதிக தொலைவில் இருந்தாலும், அருகில் இருந்தாலும் இரண்டே நாட்களில் இப்பூமி அழிந்து விட்டிருக்கும்.

6. நம்பூமியின் மேல் அயனவெளிமண்டலம் இப்பொழுது இருப்பதைவிடப் பாதி அளவு அடர்த்தியாக இருந்தால் பிராண வாயு என்பதே இல்லாமல் பூமியில் வாழும் உயிர்கள் யாவும் அழிந்துவிட்டிருக்கும்.

7. நம் பூமியின் ஈர்ப்புசக்தி இப்பொழுது இருப்பதைவிட அதிகமாக இருந்தாலும், குறைவாக இருந்தாலும் மனித மற்றும் இதர உயிர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டு மடிந்திருக்கும்.

8. பூமியிலுள்ள கடல்களின் ஆழம் இன்னும் சிலமைல்கள் இப்பொழுது இருப்பதைவிட ஆழமாக இருந்திருக்குமேயானல் கரியமில வாயுவும், பிராணவாயுவும் பூமியில் போதிய அளவு இல்லாமல் போயிருக்கும். (யார் அதைக் கணக்கிட்டு அமைத்தார்கள் ?)

9. பூமியின் தட்பவெப்பநிலையினைப் பாதுகாக்கும் போர்வை போன்ற மேல்மட்ட வெப்பநிலையின் அடர்த்தி இப்பொழுது உள்ளதைவிடக் குறைவாக இருந்திருந்தால் சூரியனின் வெப்பம் இப்பூவுலகில் அநேக இடங்களில் தீப்பற்றக் காரணமாக இருந்து பூவுலகமே அழிந்து விட்டிருக்கும். (இந்தப் பூவுலகம் அழியாமல் யார் பார்த்துக் கொண்டு இருக்கிருர்கள் ?)

10. உயிர் வாழ்வதற்குத் தேவைப்படும் அனைத்து மூலப் பொருள்களும், வசதிவாய்ப்புகளும் இப்புவியில் எளிதாக அமையப்பட்டுள்ளன. மண், நீர், வாயு, நெருப்பு, வெளி இவைகள் யாவும் உயிர்வாழ்வதற்கும் வளர்ச்சிக்கும் தேவை. இவைகளை இவ்வளவு பெரிய அளவில் தோற்றுவித்துச் சேமித்துவைத்து, கிடைக்கும்படியும் வழிமுறைகள் செய்து வைத்தது யார்?

இவைகளை எல்லாம் ஆராயும்பொழுது இப்பரந்த உலகமும் இதர கோள்களும், நட்சத்திரங்களும் சர்வ வல்லமையும், திறமையும், நுணுக்கமும், வாய்ந்த ஒரு சக்தியினல் தான் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது.

அந்த சக்தியினல்தான் கண்காணிக்கப்பட்டு வர வேண்டும் என்பதும் சந்தேகமின்றித் தெளிவாகப் புலனுகிறது.

— நன்றி 'ஓம்சக்தி' (ஏப்ரல் 1985)

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(குரோதனஹு சித்திரைமீ 1உ முதல் 31உ முடிய)

(13—4—1985 முதல் 13—5—1985 முடிய)

சுக் பு	சூ செ ரா		
	இராசி		
கு சந்			
		சனி கேது	ல/

	சூ சந்	கே	குரு சனி
	அம்ஸம்		
			பு
செ	ரா சுக்		ல/

குரோதனஹு சித்திரைமீ 1உ சிரவண நக்ஷத்திரம் காளசகரணம்கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் சுத்ததினத்தில் தற்பறை நீங்கவந்த 30 நாழிகை 6விநாடிக்குக்கன்னியா லக்னத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் மீன இராசியிலிருந்து மேஷ இராசி சங்கிரமணமாக சௌரமான சித்திரைமாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று விஷு புண்ணியகாலம். சர்வேஸ்வரனருளால் சம்ரக்ஷணம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். தென்னாட்டில் பூமியானது நல்லபலனைக் கொடுக்கும். தானியங்களின் விளைவு அதிகரிக்கும். பசுக்கள் பால் விருத்தியாகும்.

உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈஸ்வர கட்டளையில் பரமாசாரிய சுவாமிகளாக வந்து சிவராஜ யோகத்தில் திருவீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் புத்தாண்டின் படியில் உலக மாந்தர்களுக்குச்சிவசமயநன்னெறி,தத்துவார்த்த விளக்கங்கள்

திருவாய் மலர்ந்து போதித்தருள்வார்கள். மாந்தர்கள் விவேக நற்பண்பில் திகழவும் இளைய சமுதாயத்தினர் சகல கலைகளிலும் உயர் அறிவு பெற்றுச்சிறந்தோங்கவும் திருவுளம்கொண்டு மகா சபையினில் பேருரை நிகழ்த்தி ஆசியருள்வார்கள்.

குறிப்பு:- **சந்திரகிரஹணம்:** குரோதனவஷ சித்திரைமீ 22உ (4—5—1985) சனிக்கிழமை கேதுகிரஸ்தபூர்ண சந்திர கிரஹணம். சுவாதி நக்ஷத்திரத்தில் ஸ்பர்சம். விசாக நக்ஷத்திரத்தில் மோக்ஷம்.

ஸ்பர்சம்	இரவு மணி	11-40 P.M.	நிமீலனம்	0-51 A.M.
மத்தியம்	,,	1-25 A.M.	உன்மீலனம்	2-00 A.M.
மோக்ஷம்	,,	3-05 ,,	பரிமாணம்	19¾ வீசம்

அன்றுபகல் 2½ மணிக்குபோஜனம். பௌர்ணமி சிரார்த்தம் மறுதினம் செய்க. சுவாதி நக்ஷத்திரத்திலும் சதயம், பூரட்டாதி, திருவாதிரை, புனர்பூசம் இந்த நக்ஷத்திரங்களிலும் பிறந்தவர் சாந்தி செய்துகொள்க.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் கௌரவத்திற்கு ஏற்பவரும். குல சம்பிரதாய நல்ல செலவினைச்செய்யும். அவசரவார்த்தைபகர்தல் கோபம்வருதல் பின் ஆறுதல் ஆகும். வியாஜ்ஜிய வழக்குகளில் குருபார்வையால் அனுகூலம் ஏற்படச்செய்யும். எல்லாக்காரியங்களும் மதிப்பில் நடந்துவரும். தாரப்புத்திரர்களுக்குச் சௌக்கியம் தரும். மே 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரப்பலனாக நடக்கும். பண வருமானம் வரும். அதற்கேற்பச் செலவும் ஆகும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் விளம்பரமும் முதலீடும் செய்யும். உத்தியோகத்தில் பதவி உயரும். வாகனசுகம் திருப்தியளிக்கும். தார புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். எல்லாக்காரியங்களும் இஷ்டசித்தியாக நடந்துகொண்டிருக்கும் மே 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் கணிசமாக வரவாகிக்கொண்டிருக்கும். இரத்தினபூஷணம் தரும். மூதாதையரின் சொத்து அனுபோகத்துக்கு வரும். இயந்திரம்

வாகனங்களில் நல்லன ஏற்படும். புத்திரர் அல்லது புத்திரிக்கு அஜீர்ணம்வந்து குணமாகும். ஏப்ரல் 13,14 மே 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுப பலனை நடக்கும். பண வருமானம் நல்ல விதத்தில் வந்துசேரும். எழுத்துமூல விஷயங்களில் நல்லன ஏற்படும். அரசாங்க கௌரவப்பட்டம் தரும். ஸ்திர சொத்துக்களில் ஏப்ரல் 18 தேதியானல் நல்ல ஏற்பாடுகளைச் செய்யும். வாகன சுகம் திருப்தியளிக்கும், எல்லாக் காரியங்களும் வெற்றிகரமாகநடந்துகொண்டிருக்கும். ஏப்ரல் 16, 17 தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபம்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் நல்லவிதத்தில் வந்து சேரும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு, நல்ல சம்பவம் ஏற்படுதல் ஆகும். இயந்திரவாகனம் தரும். பூமி பிராப்தியில் நல்ல ஏற்பாடு நடக்கும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். எல்லாக்காரியங்களும் வெற்றியாக நடந்துவரும். ஏப்ரல் 18, 19 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனைநடக்கும். பண வருமானங்கள் வந்து கொண்டிருக்கும். சரிசமன் செலவும் ஆகும். சகோதரர்களுக்கு ஏப்ரல் 15 தேதியானல் மேலிடத்திய நன்மைஉண்டாகும். வீடு, வாகனபிராப்தியில் நல்லசௌகரியம் தரும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 20, 21 தேதிகள்சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளிசுபம்.

7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் எழுத்து மூல விஷயங்களில் நற்பலன் தரும். இராசிக்கு ஓர் விபத்து வந்து தப்பும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய கிலேசம் நீங்கும். தாரபுத்திரர்களுக்குச் சௌக்கியம் தரும். எல்லாக்காரியங்களும் நல்ல விதமாக நடத்து கொண்டிருக்கும். ஏப்ரல் 22, 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். தன வருமானம் வந்து நிறையும். வஸ்திரபூஷணம் தரும். நவீன பொருள் வாங்குதல் ஆகும். வாகன சுகம் திருப்தியளிக்கும். அரசாங்க நன்மைகளை உண்டுபண்ணும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடந்துவரும். ஏப்ரல் 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் மதிப்புடன் வரும். மேடைப்பிரசங்கம் கீர்த்தி அளிக்கும். ஏப்ரல் 18 - இல் பூமிபிராப்தியில் ஓர் ஒப்பந்தம் ஏற்படும். பசுபால் பிராப்தி ஏற்படும். வயிற்றில் அழற்சி ஏற்பட்டுக் குணமாகும். எல்லாக்காரியங்களும் நல்ல விதமாக நடக்கும். ஏப்ரல் 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் வெகுவாக வரும். நல்ல வஸ்திரபூஷணம் தரும். சகோதர வழி சுபம் ஏற்படும். இரும்பு இயந்திர சாதனங்களில் நல்லன ஏற்பட்டு வரும். வயிற்றில் அஜீர்ணம் ஏற்பட்டுக் குணமாகும். மே 4 தேதியில் நல்ல சம்பவம், மதி நுட்பசாதனை, ஒப்பர்தங்களில் நல்லன ஏற்படுதல் ஆகும். ஏப்ரல் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுப பலனுக நடக்கும். தன வருமானம் வெகுவாக வரும். சகோதரருக்கு உயர்வு தரும். நவீன வாகனம் தரும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். எல்லாக்காரியங்களையும் புத்தி சாதுரியத்தில் நடத்திக்கொண்டிருக்கும். மே 1, 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம் வெள்ளி, சனி சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வரவு செலவு சரிசமனுக இருந்து வரும். மனோதைர்யம் தரும். மித்திரர்கள் பிரபலஸ்தர்கள் போற்றுவர். கௌரவத்தில் சில நல்ல காரியங்களைச் செய்யும். புனிதஸ்தலம் சென்று வருதல் ஆகும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். மே 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

கடிதம் :

15. A. முதல்தெரு,
பாலாஜிநகர், சென்னை-14,
15—3—85.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடைய பொன்னர் திருவடிகளுக்கு மிகப்பணிவான வணக்கம்.

'பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' கருணை கூர்ந்து தங்களைத் தரிசிக்கும் அரிய வாய்ப்பினை அளித்தமைக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். தாய் வீடு அடைந்தது போன்றதோர் உணர்வில் நெஞ்சம் தழுதழுத்து விட்டேன்.

கடந்த முப்பது ஆண்டுகளில் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு வெற்றிப்படியிலும் தருமபுர ஆதீன மாணவியாக நெஞ்சம் நிமிர்ந்து செயல்படும் ஆற்றலை எனக்கு ஊட்டிய தருமை ஆதீனத்தை என் தாய் வீடாகக் கருதுவதில் தவறில்லையே?

1955 இல் மதுரையில் இருந்த என் பெற்றோர்களிடம் செல்ல நேர்ந்தது. அங்குத் திருப்பனந்தாள் மடத்தினர் நடத்திய கந்தர் கலிவெண்பாப் பாடல் போட்டி, திருவாசகப்போட்டி, தேவாரப்போட்டி அனைத்திலும் முதல் பரிசு பெறும் பேறு கிடைத்தது. எனது பள்ளிப்படிப்பிற்கான செலவு அனைத்தையும் திருப்பனந்தாள் மடத்தினர் ஏற்றுக்கொண்ட போது எனது நன்றியறிதலை நமது ஆதீனத்திற்கு மனதாரச் செலுத்தினேன். அவ்வமயம் திருப்பனந்தாள் கல்லூரி முதல்வராக இருந்த திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் என்னை அன்புடன் விசாரித்துப்பாராட்டினர். 'தருமபுர ஆதீன மாணவி வெற்றி பெறுவதில் வியப்பில்லை' என்ற அவரது மொழிகள் இன்றும் பெருமிதத்தை அளிக்கின்றன.

நினைவு தெரிந்த நாள் முதல் தோன்றாத் துணையாக, குருமகா சந்நிதானம் அவர்கள் எனது வழிகாட்டியாக விளங்குவதை ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் காண்கிறேன். குருவாரத்தில் அன்று தங்களைத் தரிசிக்கும் பேறு பெற்றபோது "ஆலின் கீழ் அறம் நால்வர்க்கு அருளிய" மோன குருமணியாகவே கண்டேன்.

சிறுவயதில் இறையுணர்வை வித்திட்டதன் முழுப்பயனையும் இன்று அடைந்து வருகிறேன். என்றென்றும் தருமபுர ஆதீன மாணவியாகவே இருந்துவர, குருவருளாகிய தங்கள் திருவருள் ஆசிகளைக் கோருகின்றேன்.

பொன்னர் திருவடிகளில் பணிந்த
வணக்கத்துடன்,
மாணவி ரேவதி.

ஞானசம்பந்தம்

இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி:

பாடம் – 4.

ஆகமம்

ஆகமங்கள் என்னும் சொற்பொருள்:

இறைவனால் ஆன்மாக்களுக்குச்செல்வமும், வீடும் அருளும் பொருட்டும் பாசநீக்கத்தின் பொருட்டும் அருளப்பெற்று, நம்முடைய ஆசிரியர்வரை பரம்பரையாக உபதேசிக்கப்பெற்று வருவதால் அந்நூல்கள் ஆகமம் என்று பெயர்பெற்றன. பரம்பரையாக ஓதுவிக்கப்பெற்று, ஓதப்பெறும் நூல் ஆகமம். அன்றியும் காமம், வெகுளி முதலிய குற்றங்கள் அற்றவரும், பிறரை வஞ்சிக்கும் எண்ணமற்றவருமான சான்றோர் ஆப்தர் எனப்பெயர் பெறுவர். இத்தகைய ஆப்தர்களின் வாக்கியம் ஆகமமாகும். இயல்பாகவே, குற்றமற்றவரும் கருணையே திருமேனியாகக் கொண்டவருமான சிவபெருமானே உண்மையில் பரம ஆப்தர். அவரால் உயிர்களிடத்தில் உள்ள கருணையால் அருளப்பெற்ற நூல் ஆகமம். இதனால் ஆகமம் தான் முக்கய பிரமாணமாகும்.

நிகமமும் ஆகமமும்:

வேதங்களும் ஆசிரியர், சீடர் பரம்பரையிலேயே கற்பிக்கப்படுகின்றன. இதனால் வேதங்களும் ஆகமங்கள் தான். வேதங்களையும் ஆகமங்களையும் பிரித்து அறிவதற்காக வேதங்களை நிகமம்என்றனர்; ஆகமத்தை ஆகமம்என்றே வழங்குகின்றார்கள். "நிகம்யதே போத்யதே அநேநேதி" என்னும் விற்பத்தியின்படி என்றும் நம்முடைய நன்மையையே அறிவிப்பதால் வேதம் நிகமம் என்று பெயர் பெற்றது. மக்களின் பக்குவத்தன்மை பலதிறப்பட்டதாதலின் எல்லா அதிகாரிகளுக்கும் ஏற்ற பல

வழிகளையும் விளக்குவதாலும், இந்திரன், அக்னிபோன்றஎல்லா தேவர்களையும் பரமாத்தும சொருபமாகத் துதித்துள்ளதாலும் வேதம்பொதுநூல் என்று கூறப்படுகிறது. உத்தம அதிகாரிகளை நோக்கி உபதேசிக்க எழுந்ததாலும், ஏனையதேவர்களினின்றும் பொது நீக்கி ஒரு தெய்வத்திற்கு மட்டுமே பரத்துவங்கூறுவதாலும், ஆகமம் சிறப்பு நூல் என்ருயிற்று. இக்கருத்து பௌஷ்கர பாஷ்யத்திலும் திருமந்திரம், சிவஞானசித்தியார் ஆகிய நூல் களிலும் கூறப்பெற்றுள்ளது.

ஆகமங்கள் எத்தகையவர்களுக்கு உபதேசிக்க எழுந்தன?

சிவாகமம் உத்தமாதிகாரிகளுக்கு உபதேசிக்க எழுந்தது என்று முன்பே கூறப்பெற்றது. அத்தகைய உத்தமாதிகாரிகள் தீவிரதரம், தீவிரம், மந்தம், மந்ததரம் என நான்கு பிரிவினர் ஆதலின் அவர்கள் முறையே சாலோகம், சாமீபம், சாருபம், சாயுச்சியம் என்னும் முத்தி நிலைகளை அடையும் வண்ணம் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என்னும் நான்கு பாதங்களை உடையதாகவும், மந்ததரம் முதலான அதிகாரிகளுக்குத் தடத்த நிலையையும், தீவிரதர அதிகாரிகளுக் குச் சொருபநிலையையும் உபதேசமுகத்தான் விளக்கவும் வந்தது ஆகமம்.

ஆகமங்களின் பெயர்கள்:

சைவம், வைணவம், சாக்தம் ஆகிய சமயங்களின் நூல் களுக்கும் ஆகமங்கள் என்னும் பெயர் இருப்பினும், நடைமுறை யில் சைவநூல்கள் ஸம்ஹிதைகள் என்றும் சாக்தநூல்கள் தந்திரங்கள் என்றும் பிரித்தே வழங்கப்படுகின்றன. சைவா கமங்கள் மூலாகமங்கள் என்றும் உபாகமங்கள் என்றும் இரு பிரிவுடையன. இத்தகைய பிரிவுகள் வைணவ சாக்த தந்திரங் களுக்குக் காணப்படவில்லை. மூலாகமங்கள் இருபத்தெட்டு. காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், ஸூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிச்வாசம், ஸ்வாயம்புவம், அநலம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், புரோத்கீதம், லலிதம்

ஸித்தம், ஸந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் என்பன இருபத்தெட்டு மூலாகமங்களின் பெயர்களாம். உபாகமங்கள் இருநூற்றேழு .

ஆகமங்களின் பிரிவுகள் :

மூலாகமங்கள் இருபத்தெட்டும் சிவபேதமென்றும் ருத்ர பேதமென்றும் இருபிரிவுகளாக உள்ளன. காமிகம் முதலாக சுப்பிரபேதம் ஈறுகஉள்ள பத்துஆகமங்களும் சிவபேதமென்று கூறப்படுகின்றன. விஜயம் முதல் வாதுளம் வரையுள்ள பதினெட்டு ஆகமங்களும் ருத்ரபேதமாம். இவ்விருவகை ஆகமங்களையும் உபதேசித்தவர் சிவபெருமான் ஒருவரே. சிவபேதமாகிய பத்துஆகமங்கள் ஒவ்வொன்றையும், மூன்று மூன்று பேர்கள் பரம்பரையாகக் கேட்டார்கள். இவர்களைப் பிரளவாதி சிவர்கள் என்பர். பதினெட்டு ருத்திரபேதாகமங்கள் ஒவ்வொன்றையும் இரண்டிரண்டு பேர்கள் பெற்றனர். இவர்கள் அநாதிருத்திரர் முதலானோர். ஆகவே சுரோத்துருபேதத்தால் (கேள்வி வகையால்) ஆகமங்கள் சிவபேதமென்றும், ருத்திர பேதமென்றும் இருவகைகளாயின.

ஆகமங்களின் பாதங்கள் :

ஒவ்வொரு மூலாகமத்திற்கும் நான்கு பாதங்கள் உள்ளன என்று முன்பே கூறப்பெற்றது. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மை, ஆறு அத்துவாக்களின் விளக்கம் முப்பத்தாறு தத்துவங்களின் தன்மை, இறைவன் செய்யும் ஐந்து தொழில்களின் முறைமை, முத்தியின் இலக்கணம் போன்றவை ஞானபாதத்தால் விளக்கப்பெறும் கருத்துக்களாம்.

இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்யாஹாரம் தாரணை, தியானம், சமாதி, நாடிசுத்தி போன்றவைகள் யோக பாதப் பொருள்களாம்.

பூமிலக்ஷணம், பூகர்ஷணம், வாஸ்துசுத்தி, கிராமலக்ஷணம், ஆலயங்களின் இலக்கணங்கள், இலிங்க பேதங்கள் அவைகளின் இலக்கணங்கள், பீடலக்ஷணங்கள், சந்திரசேகரர்,

நடராஜர் போன்ற சகலமூர்த்திகளின் இலக்கணங்கள் இவை களின் பிரதிஷ்டைகள், நித்திய வழிபாடு, மாதவழிபாடு, உற்சவம் முதலான சிறப்பு வழிபாடுகள் ஜீர்ணோத்தாரணம், பிராயச்சித்தம், ஆசாரியரது இலக்கணம், தீக்கை, அந்தியேட்டி போன்றவைகள் கிரியாபாத விடயங்களாம்.

ஆசாரியர், சாதகர், புத்ரகர், சமயிகள் போன்றோர் செய்ய வேண்டிய நாட்கடன், ஆன்மார்த்த வழிபாடு, திருக்கோயிலுக்கு அலகிடுதல், மெழுகிடுதல், துதித்தல், மலர்கொய்தல் போன்றவைகள் சரியாபாதத்தில் விளக்கப்பெறுபவைகளாம்.

ஆகம நூல்கள் :

கிரணம், சுப்ரபேதம் என்னும் இரு ஆகமங்கள் தாம் நான்கு பாதங்களுடன் கிடைக்கின்றன. மற்ற ஆகமங்கள் இவ்வாறு நான்குபாதங்களுடன் முழுமையாகக்கிடைக்கவில்லை. குறைந்த பாதங்களுடனும் சிற்சில படலங்களுமேதான் இருபத்தெட்டு ஆகமங்களிலும் கிடைக்கின்றன. மிருகேந்திரம், பௌஷ்கரம், காமிகம், தேவிகாலோத்தரம், மதங்கபாரமேஸவரம் ஆகிய ஆகமங்களில் ஞானபாதம் கிடைக்கிறது. நூல்கள் நன்கு காப்பாற்றப்படாமையால் மறைந்து போயின. பல ஆகமங்களுக்குக் கிரியாபாதம் மட்டும் சிவாசாரியர்களால் காப்பாற்றப்பட்டன. ஆலயவழிபாட்டிற்குக்கிரியாபாதம் இன்றியமையாததாகையால் சிவாசாரியர்கள் இதைக் காப்பாற்றினர்.

ஆகம உரை நூல்கள் :

கிரணாகமத்திற்கு இராமகண்டர் என்பவர் உரை எழுதியிருக்கிறார். இந்த ஆகமத்திற்கே அகோர சிவாசாரியார் எனபவரும் உரை எழுதியிருக்கிறார். ஸ்வாயம்புவாகமத்திற்கு ஸத்யோஜ்யோதி என்ற ஆசாரியர் எழுதிய உரையுள்ளது. உபாகமங்களில் மிருகேந்திரம் என்ற ஆகமத்திற்கு நாராயணகண்டர், அகோர சிவாசாரியர் ஆகியவர்கள் எழுதிய உரைகள் உள்ளன. மதங்கபாரமேசுவரம் ஸார்த்தத்ரிசதி காலோத்தரம் ஆகிய இரு உபாகமங்களுக்கும் இராமகண்டர் உரை எழுதியிருக்கிறார்.

பௌஷ்கரம் என்னும் உபாகமத்திற்கு உமாபதிசிவமும், ஞானப்பிரகாசர் என்பவரும் உரைகள் எழுதியிருக்கிறார்கள். தேவிகாலோத்தரம் என்னும் நூலுக்கு ஞானசித்தர் என்பவர் உரை எழுதியிருக்கிறார். வாதுள சுத்தம் என்னும் ஆகமத்திற்கு ஆசிரியர் பெயர் தெரியாத உரை ஒன்றுள்ளது.

ஆகம பத்ததிகள் :

ஆகம நூல்களிலிருந்தே பிரதிஷ்டை முதலிய கர்மாக்களை அறிந்துசெய்வது அரிதாக இருப்பதால் ஆகமங்களுக்குப்பத்ததி நூல்கள் வெளிவந்தன. பத்ததிகள் கர்மாக்களின் பிரயோகமாகவே அமைந்திருக்கும். செயல் செய்பவர்களுக்கு எளிதாகச் செய்ய உதவுவதே பத்ததிகளின் பயன். துர்வாசர், பிங்கலர், உக்ரஜ்யோதி, சத்யோஜ்யோதி, ஸ்ரீகண்டர், இராமகண்டர், விஷ்ணுகண்டர், வித்யாகண்டர், ஞானசிவர், ஞானசங்கரர், சோமசம்பு, ப்ரம்மசம்பு, த்ரிலோசனசிவர், அகோரசிவர், ப்ராசாதசிவர், இராமநாதசிவர், ஈசானசிவர், வருணசிவர் என்பவர்கள் முக்கியமான பதினெட்டு பத்ததிகாரர்கள். வேறு சிலரும் பத்ததிகள் எழுதியுள்ளனர். அகோரசிவாசாரிய பத்ததியே இன்று வழக்கில் உள்ளது.

ஆகமங்கள் ஓதப்பட்டு வந்தமுறை :

வேதங்களை எவ்வாறு ஒவ்வொரு சாகையையும் பரம்பரை பரம்பரையாக ஓதிவந்தார்களோ அவ்வாறே ஆகமங்களையும் பகுத்துக்கொண்டு ஓதிவந்துள்ளார்கள் என்று தெரிகிறது. காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், யாமளம், காலோத்தரம், சுப்ரபேதம், மகுடம் என்னும் ஒன்பது ஆகமங்களைத் திருமூலர்பரம்பரையில் ஓதிவந்தார்கள் என்று திருமந்திரத்தால் அறிய முடிகிறது,

பெற்றநல் ஆகமம் காரணங் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள் மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே.

என்பது திருமந்திரம். இதேபோன்று தமிழ்ச் சைவ சித்தாந்திகளால் சிவசமவாதிகள் என்று கூறப்படும் பிரிவினர் கீழ்க்கண்ட ஏழு நூல்களையும் படித்ததாக ஞானவரண விளக்கத்தில் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் கூறுகிறார்.

"கிரணம் ஸ்ரீமத்ங்கம் ச பராக்யம்
ரௌரவம்த்விஹ
ஸ்வாயம்புவெள த்விருபௌ ம்ருகேந்திரம்
சப்த சம்ஹிதாம்"

கிரணம், மதங்கம், பராக்கியம், ரௌரவம், பூர்வம், உத்தரம் என்னும் இருபிரிவுடைய சுவாயம்புவம், மிருகேந்திரம் என்னும் ஏழு ஸம்ஹிதைகளைச் சிவசமவாதிகள் ஓதிவந்தார்கள். ராமகண்டர், நாராயணகண்டர் போன்றவர்கள் இந்தப் பரம்பரையில் வந்தவர்களே. இவ்வாறே ஆதிசைவர், வீரசைவர், ஊர்த்துவசைவர் போன்ற பிரிவினர்களும் ஆகமங்களைப் பகுத்து ஓதிவந்ததாக மேற்கூறிய நூலிலிருந்து அறிய முடிகின்றது.

ஆகமங்களின் காலம் :

அநாதியே அமலனாகிய அரனார் அருளிய ஆகமங்களும் அநாதியாய்க் காலத்துக்கு அடங்காதவைகள் தாம். ஆயினும் வரலாற்று முறையிலும் ஆகமங்களின் பழமையை அறியலாம். கி. பி. 4 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற பாசுபத சூத்ர உரையான கௌண்டின்ய விருத்தியில் காமிக சுலோகங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. திருமந்திரத்தில் ஆகமங்களின் பெயர்கள் வருவதை முன்னமே கண்டோம். ஆதிசங்கரர் ப்ரபஞ்சசாரம் என்னும் நூலில் "வக்ஷ்யாமி சைவாகம ஸாரமஷ்டத்ரீம் சத கலாந்யாச விதிம் யதாவத்" என்று சைவாகமங்களைக் குறிப்பிடுகிறார். அபிநவகுப்தரின் தந்திராலோகம் போன்றவைகளால் ஆகமங்களின் பழமையை அறிய முடிகின்றது. சோழமன்னர்கள் அனைவரும் ஆகம முறைப்படி இறைவனை வழிபட்டும் ஆகமவிற்பன்னர்களை ஆதரித்தும் வந்துள்ளனர் என்பதைச் சோழர் வரலாற்றால் அறியலாம்.

சித்தாந்தம் :

முடிந்த முடிவு என்னும் பொருளை உடையது சித்தாந்தம் என்னும் சொல். காமிகம் முதலான சைவ ஆகமங்களுக்குச் சித்தாந்த நூல்கள் என்பது பெயர். "மற்ற சமய நூல்கள் எல்லாம் பரபக்கம்; ஆகமங்கள் சித்தாந்தமாகும்" என்று காமிகாகமம் கூறுகிறது. பலபல பிறவிகள் எடுத்துப் பக்குவப்பட்ட உயிர்களுக்குச் சரியை, கிரியை, யோக, ஞானமுறையால் சைவ சித்தாந்த முத்தியை அடைய வழிகாட்டும் ஆகமங்களைச் சித்தாந்தம் என்பதில்தவறில்லை. காஷ்மீரம்முதல் கன்னியாகுமரி வரை பரவியிருந்த ஆகம நெறி இன்று தமிழகத்தில் மட்டுமே எஞ்சி நிற்கிறது. இந்நெறியைப் பேணிக்காத்து வளர்ப்பது சைவர் ஒவ்வொருவரின் கடமையாகும்.

வினாக்கள்

1. ஆகமம் என்னும் சொல்லின் பொருள் என்ன ?

2. ஆகமங்களைக் கேட்கத் தகுதியுடைய அதிகாரிகள் யாவர் ?

3. ஆகமங்களின் பெயர்கள் யாவை? மூலாகமங்களின் எண்ணிக்கை என்ன ?

4. உபாகமங்கள் எவ்வளவு ?

5. ஆகமங்களின் பிரிவுகள் எவை ? பிரியக் காரணம் யாது ?

6. ஆகமங்களின் பாதங்களின் பெயர்களை வரைக.

7. ஆகம பத்ததி ஆசிரியர்கள் யாவர் ?

8. சித்தாந்தம் என்னும் சொல்லுக்குப் பொருள் யாது ?

9. நிகமம் – ஆக்மம் சிறு குறிப்பு வரைக.

கட்டுரை வழங்கியவர் : டாக்டர். என். ஆர். பட்.
பாண்டிச்சேரி.

கடவுளை அடைதற்கு ஆலய வழிபாடு எளிதானது. அனைவராலும் செய்யக்கூடியது. இது செயல்முறை வழியாம். ஆகவேதான் ஆலய வழிபாட்டுக் கிரியைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. அறிவு வழி (ஞானவழி) உயர்ந்த வழி. ஆயின் அனைவராலும் எளிதில் அடைதற்குரியதன்று. நம்நாட்டில் ஆலய வழிபாட்டுமுறை தொன்று தொட்டு வந்த பழைமையான முறையாகும். இது தெய்வ அருளால் உருவானது. திருக்கோயில் தொண்டுகளும்' வழிபாடுகளும் பக்தியை வளர்க்கும் ; உள்ளத்தைத் தூய்மையாக்கும் ; சிவ அருளுக்கு உரிமையாக்கும் ; பேரானந்தப்பெருவாழ்வைக் கொடுக்கும். இம்மைப்பேறுகளையும், மறுமைப்பயன்களையும் பெறுதற்கு வழிபாடும் கிரியைகளும் உதவுகின்றன. வழிபாட்டின் பயனைப்பெற விரும்புவோருக்கு ஆத்ம, ஸ்நான, திரவிய, இலிங்க, மந்திரம் ஆகிய ஐவகைச் சுத்திகளும் இன்றியமையாதனவெனச் சிவாகமங்கள் கூறுகின்றன.

வழிபடுவோரின் தூய்மைக்காக விரதம், செபம், தியானம், தோத்திரம், தலயாத்திரை செய்தல், சைவ சாதனங்களை அணிதல் என்பன அறிவுறுத்தப் பெற்றுள்ளன. வேதங்களில், வைதிக யாகம் போன்று சிவாகமங்களில் சிவயாகம் முக்கிய இடத்தை வகிக்கிறது. நித்திய, நைமித்தியக் கிரியைகள் மிக விரிந்தும், பரந்தும் அமைந்துள்ளன. மந்திரங்களினுல் மண், கல், மரம் ஆகிய அனைத்தும் தெய்விக இயல்பைப் பெறுகின்றன என்பது சிவாகமத் துணிவு.